Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 06 (12.11.2002) செவ்வாய்க்கிழமை இதழ் : 43

சொலெக்ஸ்
மூக்குக் கண்ணாடியகம்
கண் பரிசோதித்துக் கண்ணாடி வழங்கவும்,
செயற்கை மாபிள் கண்களுக்கும்,
மற்றும் பல்கட்டுதல், மிதப்புப் பற்களுக்கு
கிளிப்ஸ் செய்து கொடுத்தல்
லக்ஷெறி பல் கட்டுமிடம்
232/A, கண்டிவீதி, சாவகச்சேரி.
(சி-174)

# ஒஸ்லோ உதவி வழங்கும் கூட்டத்தில் மூன்று பில்லியன் டொலர் நிதியுதவி!

## நாடாளுமன்றில் அமைச்சர் அமரதுங்க உறுதி



(கொழும்பு)

**எதிர்வரும 25ம் திகதி ஒஸ்லோவில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் உதவி கிடைக்கும் என உறுதியாக நம்புவதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், 800 மில்லியன் டொலர் நிதியுதவி ஆண்டு ரீதியான அடிப்படையில் கிடைக்கும் எனவும், அடுத்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஜப்பானில் நடக்கும் போது நீண்ட கால அபிவிருத்தி நிதி இலங்கைக்கு கிடைக்கும் எனவும் அமைச்சர் ஜோன் அமரதுங்க மேலும் தெரிவித்தார்.

## - சமாதான முயற்சியில் -
## ஒஸ்லோ நிதியுதவி கூட்டம் மைல்கல்லாக அமையும்!
### பிரதமர் ரணில் நம்பிக்கை

(கொழும்பு)

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம்- சமாதான முயற்சிகளில் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாக அமையும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குச் சமாதான முயற்சிகள் பற்றி அளித்த பிரத்தியேகப் பேட்டியில் அவர் இவ்வாறு கூறினார்.

அப்பேட்டியில் அவர் மேலும் குறிப்பிடும்போது-

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில், விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே முக்கியமான ஒப்பந்தம் ஒன்று ஏற்படலாம் எனப் பேச்சுக்கள் உலாவினாலும் அதனை உறுதியாக இப்போது கூறமுடியாது.



சமாதானப் பேச்சுக்கள் நகரும் போக்கிலேயே எதுவும் தீர்மானிக்கப்படும் என்றும் பிரதமர் ரணில் தெரிவித்தார்.

## கிளிநொச்சி, மன்னாரில் இன்று கண்டனப் பேரணி

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீதான நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்து இன்று கிளிநொச்சியிலும் மன்னாரிலும் மாபெரும் கண்டனப் பேரணிகள் நடைபெறவுள்ளன.

கிளிநொச்சி கந்தசாமி கோயிலடியில் இருந்து இன்று காலை 10 மணியளவில் கண்டனப் பேரணி ஆரம்பமாகி, அரச செயலகத்தில் கண்டன மகஜர் கையளிக்கப்படுவதுடன் நிறைவடையும். மன்னார் பொது விளையாட்டு அரங்கில் இருந்து காலை 10 மணிக்கு கண்டனப் பேரணி ஆரம்பமாகும். இப் பேரணியும் மன்னார் செயலகம் வரை சென்று கண்டன மகஜர் கையளிக்கப்படுவதுடன் நிறைவடையும்.

அம்பாறை மாவட்டத்திலும் இன்று மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது. (03)

## முக்கிய கனேடிய அமைச்சர்களும் ஒஸ்லோ கூட்டத்தில் பங்குபற்றுவர்

ஒஸ்லோ உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கனடா சார்பில் இரண்டு முக்கிய அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கனடாவின் சர்வதேச ஒத்துழைப்புக்கான அமைச்சர் சூசன் வீலர், பிரதி வெளிவிவகார அமைச்சர் டேவிட் கில்கர் ஆகியோரே இக்கூட்டத்தில் கலந்து கொள்ள விருப்பவர்களாவர்.

## 7 வயதுச் சிறுவனும் திருடர் கோஷ்டியில்!

(உரும்பிராய்)

கோப்பாய்ப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினமிரவு திருட்டு முயற்சியில் ஈடுபட்டோரில் 7 வயதுச் சிறுவன் உட்பட இருவர் பிடிபட்டுள்ளனர்.

இவர்களுள் 7 வயதுச் சிறுவனின தந்தையும் அடங்குவார். இது தொடர்பாக சிறுவனை விசாரணை செய்தபோது, தாங்கள் 10 பேர் கொண்ட குழுவாக வந்ததாகவும் மிகுதி எட்டுப் பேரும் ஓடிவிட்டனர் எனவும் கூறியதோடு, யன்னல் வழியாக உட்சென்று கதவினைத் திறப்பதற்காகத் தன்னைத் திருட்டுக் கோஷ்டியினர் பயன்படுத்துவதாகவும் குறிப்பிட்டான்.

பின்னர், இளைஞர் குழு ஒன்றினூடாக இவர்கள் கோப்பாய்ப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (84)

### விண்ணாணம் விநாசியர்



இப்பிடி ஒரு தகப்பன்..?, எங்கட சமூகம் எங்கயப்பா போகுது..?

## ஈ.பி.டி.பியினரின் கைத்துப்பாக்கிகள் சி.ஐ.டி.யினரிடம் ஒப்படைக்கப் பணிப்பு!

### - நிமலராஜன் கொலை வழக்கில் நீதவான் உத்தரவு -

(யாழ்ப்பாணம்)

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினால் அரசிடம் மீள ஒப்படைக்கப்பட்ட 9 எம்.எம். கைத்துப்பாக்கிகளை குற்றப் புலனாய்வு பிரிவிடம் ஒப்படைக்கும்படி யாழ். நீதிமன்றம் இராணுவத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளது.

நேற்றுக்காலை யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மேற்படி உத்தரவை யாழ்.நீதவான் ஆர்.ரி.விக்கினராஜா வழங்கியுள்ளார்.

இப்பணிப்புரைக்கமைய மேற்படி கைத்துப்பாக்கிகள் இராணுவத் தளபதியினால் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பி.எச்.டி. ரஞ்சித் சில்வாவிடம் ஒப்படைக்கப்படவுள்ளன. பின்னர் இக்கைத்துப்பாக்கிகள் கோட்டை நீதவான் (10ஆம் பக்கம் பார்க்க)

## தைப்பொங்கலுக்கு முன் நூலகம் திறக்கப்படும்



(யாழ்ப்பாணம்)

யாழ்.நூலகம் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்துக்கு முன்னதாக திறந்து வைக்கப்படவுள்ளது. மேற்படி நூலகத்தின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளன என்றும் மிக விரைவாக நூலகத்தைத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. (01)

SERENDIB விமான சேவை
எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேசத்திலும் உள்ளது.
J/FT/P - 021-2223916, 0777-801038
CMB 505632 - 390128 - 517019
(சி-148)

# இலங்கை அணித்தோல்விக்கு மோசமான பந்துவீச்சே காரணம்!

## குற்றம் சுமத்துகிறார் சனத் ஜெயசூரியா



(ஜோகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்க அணியுடனான ஜோகனஸ் பேர்க் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 3ஆ வது நாளின் தேனீர் இடைவேளைக்கு முன்ப தாகவே இலங்கை அணி தோல்வி கண்ட மைக்கு, முதல் இன்னிங்ஸ்சில் தமது அணி கூடுதல் ஓட்டங்களை பெறத்தவறியதே கார ணம் என்று அணித்தலைவர் சனத்ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையணிப் பந்து வீச்சாளர்கள் தமது பணியைச் செவ்வனே செய்யவில்லை என்றும் சனத் ஜெயசூரிய குற்றஞ்சாட்டி யுள்ளார். பந்துவீச்சாளர்கள் அங்குமிங்குமாகக் கட்டுப்பாடு இன்றிப் பந்து வீசியதால்தான் விரைவிலேயே தோல்வியடைய நேர்ந்ததாகவும், தோள்ப்பட்டையில் ஏற்பட்ட வலிகாரணமாகத் தம்மால் இப்போட்டியில் பந்து வீசமுடியாது போய்விட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள் ளார்.

இரண்டு போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் தென்னாபிரிக்க அணி 1-0 என்ற அடிப்படையில் முன்னணியில் இருப்பது குறிப்பிடத்தக்கது.


## கட்டைவேலி- நெல்லியடி ப.நோ.கூ.சங்கம், கரவெட்டி

**கிராமிய வங்கி சேமிப்பு மீதிகளையும் மற்றும் செல்மதி வருமதி மீதிகளையும் உறுதிப்படுத்தல்.**

**மேற்படி சங்கத்தின் 2001-2002 நிதியாண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் சங்கத்திலும், கிராமிய வங்கியிலும் வைப்புக்களையும், கணக்குகளையும் வைத்திருக்கும் வாடிக்கை யாளர்கள் 12-11-2002 ந் திகதி தொடக்கம் 15-11-2002ந் திகதி வரை உங்களின் சேமிப்பு புத்தகங்களிலும், சங்க கணக்குப் புத்தகங்களிலும், 31.05. 2002ல் உள்ளவாறான மீதிகளை சங்கத்திலும் சங்க கிராமிய வங்கியிலும் கடமை நேரத்தில் உறுதிப்படுத்திச் செல்லுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**திருமதி.ஆ.ருக்மணிதேவி**
**கணக்காய்வாளர்**
**கட்டைவேலி-நெல்லியடி**
**ப.நோ.கூ.சங்கம்.**

05-11-2002 (சி-173)


# இன்றைய நாள் இனிய நாள்

**12-11-2002 - செவ்வாய்க்கிழமை**

**மேடம்** :- மக்களால் மதிக்கப்படுதல், எதிரியின் ஆணவம் குன்றுதல், கடன் வசூலாதல், இரத்த அழுத்த நோயாளர், உடலில் கவனம் வேண்டும், கல்வியில் ஊக்கம் வேண்டும்,

**இடபம்** :- மனமகிழ்ச்சி, நண்பர்கள் மகிழ்ச்சி, தொழில் முன்னேற்றம், மறைமுக செலவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மிதுனம்** :- தேவையற்ற செலவீனம், தேகசுகக் குறைவு, எடுத்த காரியம் தடை, வயிற்றுக் கோளாறு, தூரத்துப் பயணம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்

**கர்க்கடகம்** :- எடுத்த காரியம் வெற்றி, புதிய முயற்சியில் ஈடுபடல், பொது சேவையில் மதிப்பு, மாதா சுகம், வெளியூர்ப் பயணம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**சிங்கம்** :- மக்களால் மதிக்கப்படுதல், சீர்திருத்த அபிவிருத்தியில் ஈடுபடல், நண்பர்கள் மதிக்கப்படல், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- செய்தொழில் இலாபம், கௌரவம், பொது சேவையில் மனத்திருப்தி, காயம் ஏற்படல், இரத்த அழுத்த நோயாளர் கவனமாக இருத்தல் வேண்டும், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்**
**அவர்களின் சகோதரரின் புத்திரர்**
**இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- வீண்செலவுகள், எடுத்த காரியம் தடை, அயலவர்களுடன் சண்டை, காயமேற்படல், அபகீர்த்தி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- புதிய ஆடை அணிவதில் மகிழ்ச்சி, நல்ல முயற்சியில் வெற்றி, பணவரவு, சமூகத்தில் மதிப்பு, இரத்த அழுத்த நோயாளர் கவனம் எடுத்தல் வேண்டும், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம் சமம்.

**தனு** :- எதைத் தொட்டாலும் கெடுதல், தேவையற்ற செலவு, வாக்குவாதம், அயலில் மௌனம் சாதிக்கவும், இரத்த அழுத்த நோயாளர் கவனம் எடுக்கவும், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம் சமம்

**மகரம்** :- செய்தொழில் இலாபம், திடீர் பணவரவு, மனைவி மகிழ்ச்சி, எடுத்த காரியம் வெற்றி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- தேவையற்ற வாதம், கர்வம், வீண்செலவு, காயமேற்படல், மரங்களில் ஏறுவது கவனம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- தேகசுபம் நன்று, பணவரவு, பிதாவுடன் சிறிய மனஸ்தாபம், ஆபரணச் சேர்க்கை, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

# கல்வியியற் கல்லூரிகளில் அனுமதிக்கான இரண்டாம் கட்ட நேர்முகப் பரீட்சை

கல்வியியல் கல்லூரிகளில் இர ண்டாவது கட்ட நேர்முகப் பரீட் சைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விபரம் வெளியிடப் பட்டுள்ளது. நேற்று வெளியான இப் பட்டியலின் தொடர்ச்சி வருமாறு:

**கணிதம்**

சிறீரங்கநாதன் தாரணி (பருத் தித்துறை), பவளகாந்தன் ஜெய காந்தன் (காங்கேசன்துறை), செல் வநாயகம ஜெயசங்கர் (பருத் தித்துறை), செல்வராஜா கஜலா (அத தியடி), பசுபதி நளினி (பருத்தித் துறை), சிவபாலன் சர்வேஸ்வரன் (கோண்டாவில்), மாணிக்கம் கஜீபன் (சாவகச்சேரி), இரத்தினசபாபதிக் குரு க்கள் அனுரமணன் (பருத்தித்துறை), மகேந்திரன் மஞ்சுளா (கரவெட்டி), பரமசிவம் பிரபாகரன் (வவுனியா), வேலுப்பிள்ளை அமிர்தசோதி (முல் லைத்தீவு), தவராஜா வசீகரன் (முள்ளி யவளை), பாலச்சந்திரன் கபிலன் (முள்ளியவளை),

**தமிழ்**

அலியார்பசாஅசூரீர் (சாய்ந்த மருது), சபாரத்தினம் ஜெனனி (காரைதீவு), இராமநாதன் இரதிக் குமாரி (காரைதீவு), இராஜரட்ணம் லவீந்திரராஜா (திருகோணமலை), சூசனிவாஸ் யூட் பேக்மன் (திரு கோணமலை), சுப்பிரமணியம் மணி வதனன் (திருகோணமலை), சண் முகப்பிரியா நவரட்ணதாஸ் (திரு கோணமலை), உதுமா லெப்பை மொக மட் அஸ் மீர் (கொழும்பு), ஒப்பிரி மேலிஸ் சைமிலரிந் (திருகோணமலை), மிரேசா லெப்பை மொகமட் சகீஸ் (திருகோணமலை), குருசாமி யோகே ஸ்வரி (புத்தளம்), இராசையா கல்பனா (பங்கடெனியா), டபிள்யூ.ஏ.என். தேவராஜா (முந்தல்).

**ஆரம்பப்பிரிவு**

கோணலிங்கம் சேகர் (ஆரயம்பதி), வெற்றிவேல் பிரசாந்தினி (சின்ன ஊறணி), கிருஸ்ணலிங்கம் வாணிசிறீ (ஆரயம்பதி), இளைய தம்பி ஞானகுமாரி (மண்டூர்), குமார சாமி கலைச்செல்வி (மட்டக்களப்பு), செல்வநாயகம் வசந்தி (கொழும்பு), பூவலிங்கம் சுபாஜினி (செங்கலடி), நல்லரட்ணம் றஞ்சினி (களுவாஞ்சிக் குடி), இரத்தினசிங்கம் ஜெயமோகன் (மட்டக்களப்பு), தர்மலிங்கம் தர்மவேணி (கல்லூர்), சபாரத்தினம் ஜனந்தினி (செட்டிபாலயம்), விபுலானந்தம் அரு ணாகரன் (குருக்கள்மடம்), வேலுப் பிள்ளை எழில்நாதன் (மடடக்களப்பு), இரத்தினம் குணரட்னேஸ்வரன் (ஓம ந்தை), இரகுநாதன் சுபாஜினி (உரு ம்பிராய்), குணசிங்கம் லாவண்யா (நெல்லியடி), சந்திரவதனா திருக் கிளி (வல்வெட்டித்துறை), மனோ கரன் புவனேஸ்வரி (சித்தாண்டி), ஜனா ர்த்தனி கணபதிப்பிள்ளை (கல்லடி), செல்லத்துரை ரஞ்சினி (களுதாவளை), குமுதினி தில்லையம்பலம் (கர வெட்டி), கிருஸ்ணசாமி புவனேஸ் வரி (அம்பாள் குளம்), தியாகராசா பிரசாத் (பல்லவராயன் கட்டு), அருள் இளங்குமரன் அருள்மொழி வர்ணன் (பூநகரி), அனுராதா ஆனந்தராஜா (கிளிநொச்சி), கணேசன் மலர்வதனா (கிளிநொச்சி), பரராஜசிங்கம் சசி தரன் (முழங்காவில்), சுப்பிரமணியம் சுபதீபினி (கிளிநொச்சி), அபிராமி பரமானந்தபிள்ளை (கிளிநொச்சி), கந்தசாமி பிரபாகரன் (கிளிநொச்சி), மாதவராஜா சத்தியன் (கல்முனை1), குருசுதாசன் இதயதாசன் (நானாட் டான்), யேசுதாசன் ஜீன் நிலாஜினி (தலை மன்னார்), F.J. மேரி டயானா குரூஸ் (மன்னார்), நேசராஜா சாந் தினி (மன்னார்), முஸ்தபா லெபி ரிசானா (சாந்தமருது-10), விஜயசுந் தரம் தயாபரன் (கல்முனை), தியாக ராசா பிரியதாசன் (அக்கரைப்பற்று), கணேசன் சசீகரன் (தம்புலுவில்-1), மொகமட அறீவ் மொகமட் நஜீன் (மன்னார்), நவரத்தினராஜா நாகரஞ் சுதன் (மனனா்), யாக்கோவு லோட் விஜய குமாரி (மன்னார்), செகுதீன் சாமலா (அக்கரைப்பற்று-6), யோன் ஜெய ராணி லோகு (பேசாலை), தங்கமலர் செல்வி இரத்தினசிங்கம் (நல்லூர்), கதிரவேலு புஸ்பகௌதமி (கரவெட்டி), அமானுலா சுஜானா பேகம் (கல்பிட் டிய), M.பாத்திமா றுஸ்டா (பொலன றுவை), A.Rறபீனா பேகம் (கண்டகு ளியா), M.M.M. றிஸ்மி (பத்துளஓய), இராசையா கல்பனா (பங்கதெனியா), A.A. கஜல் (சிலாபம்), டானியல் றொ சாறி (தெனியாய).

**கிறிஸ்தவம்**

நேசராஜா சாந்தினி (மன்னார்), யாக்கோப்பு மேரி றமில்டா (மன்னார்), யேசுதாசன்ஜின் நிலாஜினி (தலை மன்னார்), மரியதாஸ் மெடோனா (யாழ்ப்பாணம்), யேசுதாசன் தர்ம துரை (நெடுந்தீவு), யாக்கோபு லோட விஜயகுமாரி (நானாட்டான்), யோசெப் நீவீஸ் கொஸ்லேற் (யாழ்ப்பாணம்), மரியதாஸ் மரியசெல்வம் (யாழ்ப்பா ணம்), தங்கராஜா கஜலின் கதி ரொழி (உடுவில்), சின்னத்துரை குலேந்திரன் (யாழ்ப்பாணம்), அன்ரன் இராசநாயகம் ஜெயசெல்வராஜா (அளவெட்டி), திருத்துவராஜா திவா கரன் (அல்வாய்), விசுவம் சகாய மணி (அச்சுவேலி), டொமினிக் பற் றீசியா (உரும்பிராய்), அன்ரனிதாஸ் மேர்வின் கஜந்தினி (சுன்னாகம்), நிக்கலஸ் லக்சி (திருகோணமலை), பீற்றர் ஜெயராஜ் அனுசியா சுதர் சினி (வவுனியா), பாத்லெற் ஆன் ஜெரின் (திருகோணமலை), செர் மிலா சுகந்தினி வரப்பிரகாசம் (கிளி நொச்சி), செல்வநாயகம் டொரின் கிருசாந்தினி (முல்லைத்தீவு), புலே ந்திரராஜா ஸ்ரெல்லா (ஆனைக் கோட்டை), யெயசீலி பஸ்ரியம் பிள்ளை (கிளிநொச்சி), ஞானப்பிரகா சம் இமெல்டா சுபாஜினி (முல்லைத்தீவு), பாக்கியநாதன் தர்சன் (பல்லவரா யன்கட்டு), லினாட் பிராங்கிளின் யூட் கிறிஸ்ரேபல் (திருகோணமலை), அருளானந்தம் பிரேமலதா (கல் முனை), வடிவேல் தவச்செல்வம் (காரைதீவு), யாக்கோப்பு மேரி மில்கிறேற் (கல்முனை), இக்னேசஸ் கிங்கிலி தினேஸ் கிறிஸ்ரி (கல் முனை-2), தயாசீலன் சிறீதேவி (திருக்கோவில்), அன்ரனிப்பிள்ளை சாந்தி ஜெயராணி (கல்முனை-1), வைரன் சுமதி (கல்முனை).

(மிகுதி நாளை தொடரும்)

## பொ.ஐ.மு.ஆட்சிக்காலத்தில்

# பதவி விலக்கப்பட்ட 69 படையினர் நட்டஈடு கோரி உண்ணாவிரத முஸ்தீபு

(கொழும்பு நிருபர்)

பொதுஜன ஐக்கிய முன்னணி யின் ஆட்சிக்காலத்தில் சேவையிலி ருந்து நீக்கப்பட்ட 69 படையினர் தம க்கு உரிய நட்டஈடுகளை வழங்க வேண்டும் எனக் கோரி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நட த்தப் போவதாக எச்சரிக்கை விடு த்துள்ளனர்.

தாம் இராணுவத்தில் 1985ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்ட த்தின் அடிப்படையில் தேசிய ஆயுத மனித சக்தி அமைப்பு என்ற திட டத்தினூடாக ஆட்சேர்ப்பு செய்யப் பட்டதாகவும், 13 வருடங்கள் சேவை யாற்றிய பின்னர் கடந்த 2001ம் ஆண்டு பெப்ரவரி 21ம் திகதி பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சி தம்மை பதவியிலிருந்து விலக்கி தாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

பதவியில் இருந்து விலக் கப்பட்ட படையினர் 69 பேரும் தம க்கு உரிய நட்டஈடுகளை அரசாங் கம் வழங்கத் தவறுமேயானால் சாகும் வரை உண்ணா விரதத்தில் ஈடுபடப் போவதாக எச்சரிக்கை விடு த்துள்ளனர்.


**ஜோ.எகட்டனின் ஜெசித்தாராவின்**
**இன்றைய ஸ்பெசல்**
**4 - இன் - 1 - சிக்கன் புரியாணி**
**ரூபா 125**
**ஜெசித்தாரா**
கண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, கண்டிக்குளி.
(சி-163)

**ராஜா**
யாழ்ப்பாணம்.
தீபாவளி வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
**வில்லன்**
காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30 (சி-151)
இயக்கம்: K.S.ரவிக்குமார்.



**திறைஞ்சனஸ் சங்கானை**



இன்று முதல்
விஜய், சந்தியா
நடித்த
காட்சி நேரம்
11.00, 2.45, 6.00
(சி-139)

யாழ். மண்ணில் முதன் முதலாக கீஸ்ட் (Kiisst)
உற்பத்தி நிறுவனத்தின் உன்னத தயாரிப்பு
**KIISST JAM**

**அதி உன்னத தரம், சுவை, நீண்டகால தன்மை அடிப் படையில் இயற்கைப் பழங்களிலிருந்து தயாரிக்கப்படு கின்றது.**

**உங்கள் வசதித் தன்மைக்கேற்ப, நியாய விலை, வேறுபட்ட நிறைகளில் பிளாஸ்ரிக் கப்களிலும், போத்தல் களிலும் எங்கும் கிடைக்கின்றது.**

**எமது தயாரிப்புகளாவன**

STRAWBERRY JAM
WOOD APPLE JAM
PINE APPLE JAM
MIXED FRUIT JAM

போத்தலினை மீளளித்து சேமியுங்கள் 5\-

ஆரோக்கிய வாழ்வின் இயற்கை
**சுவை KIISST**
**உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவோர்**
KIISST FOOD MANUFACTURES
55,OLD PARK ROAD
JAFFNA.


# நிவாரணத்திற்குப் பால்மா; இனி மக்களின் விருப்பமே!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நிவாரண விநி யோகத்தின்போது பால்மா வழங் கப்படுவது மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட இருக்கிறது.

பால்மாவைப் பெற்றுக்கொள்வ தற்கு விரும்பாத குடும்பங்களுக்கும் தற்போது பால்மா வழங்கப்பட்டு வருகின்றது. இது ஒரு வகையான மக்கள் மீதான திணிப்பாகவே கருதப்பட வேண்டியுள்ளது. எனவே இவ்வாறான நிலமையைத் தவிர்க் கும் முகமாகவே மேற்படி புதிய திட்டம் நடைமுறைக்கு கொண்டுவ ரப்படவுள்ளது.

இப்புதிய திட்டத்தின்படி பால்மா வைப் பெற்றுக்கொள்ள விரும்பாத குடும்பங்களுக்கு, அதற்குப் பதிலாக வேறு பொருட்களை வழங்குவதற் கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக தனித்தனியான பொருள் விநியோக அட்டவணைகள் தயாரி க்கப்பட்டு அதன் அடிப்படையில் விநியோகம் மேற்கொள்ளப்படவுள் ளது. (க,லி)

# இடம் பெயர்ந்த அனைவருக்கும் 15 ஆயிரம் ரூபா நிவாரணம்!

## கொடுப்பனவை யூ.என்.எச்.சி.ஆர். கண்காணிக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் தலா பதினையாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மேற்படி கொடுப்பனவு வழங்குவதற்குத் தேவையான முதற்கட்ட நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது. உலகவங்கியின் நிதி உதவியுடனேயே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இதற்காக முப்பத்தியொரு மில்லியன் அமெரிக்க டொலர்களை உலகவங்கி முதற்கட்டமாக வழங்க முன்வந்துள்ளது.

மேற்படி கொடுப்பனவை வழங்குவதற்கான நடவடிக்கையின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மிக விரைவாக மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கையை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கண்காணிக்கும் என்றும், அனைத்துப் பிரதேசங்களின் ஊடாகவும் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் யாழ்.அரசஅதிபர் பத்மநாதன் தெரிவித்தார்.

(க,லி)

## களுத்துறையிலும் சுதந்திர வர்த்தக வலயம்

(கொழும்பு)

சுதந்திர வர்த்தக வலயம் ஒன்று களுத்துறையில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான கலந்துரையாடல் களுத்துறை அரச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இது 100 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நீர்ப்பாசன, சூழல் பாது காப்பு சம்பந்தமான நிலவரங்களை முதலில் அமைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## தலைமன்னார் – இராமேஸ்வரம் பாலம் நிச்சயம் அமைக்கப்பட்டே தீரும்!

### அமைச்சர் கருஜெயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு நிருபர்)

இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையில் பாலம் அமைக்கும் திட்டம் நிச்சயமாக நிறை வேற்றப்படும் என அமைச்சர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இந்தப் பாலம் அமைக்கும் திட்டத்தை இலங்கை அரசாங்கம் ஒரு போதும் கைவிடாது. 29கி.மீ நீளமான இப்பாலத்தை அமைப்பதன் மூலம் தனியே இந்தியாவுடனான தரைத் தொடர்புகளைப் பேணிக் கொள்ளலாம் என்ற கருத்து தவறானது.

24 ஆசிய நாடுகளுடன் இப் பாலம அமைப்பின் மூலம் இலங்கை வர்த்தக, பொருளாதாரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.



அண்மையில் 'நாஸா' நிறுவனம் எடுதத செய்மதிப் படங்களின் மூலம பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இவவிரு பகுதிகளுக்கும் இடையில் மக்கள் போக்குவரத்து செய்ததை உறுதி செய்ய முடிந்துள்ளது.

மற்றும் இந்தப் பாலம் அமைக் கும் பணி பூர்த்தி செய்யப்பட்டால் இலங்கைக்கு மின்சார வசதி மற்றும் எரிவாயு வசதிகள் கிடைக்க வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அமைச்சர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

### தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில்

## யாழ். வீராங்கனை மிதிலா 200 மீ. ஓட்டத்தில் முதலிடம்!

(கொழும்பு)

கொழும்பு சுகதாச விளையாட்டரங்கில் நடைபெற்ற 16ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் யாழ்.பல்கலைக்கழக மாணவியான மிதிலா கனகசிங்கம், 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் இத்தூரத்தை 27 செக்கன்களில் ஓடி முடித்து சாதனை நிலை நாட்டியுள்ளார்.

அத்துடன் இவர் நீளம் பாய்தல் போட்டியில் 5.09 மீற்றர் தூரம் பாய்ந்ததன் மூலம் தேசிய மட்டத்தில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளார்.

## மீண்டும் புனரமைக்கப்படுகிறது நாவற்குழி உணவுக் களஞ்சியம்!

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் உள்ள உணவுக் களஞ்சியம் மீண்டும் புனரமைப்பு செயயப்படவுள்ளது.

தென்மராட்சியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக மேற்படி உணவுக் களஞ்சியம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

இக் களஞ்சியத்தினை உடனடியாக திருத்தி அமைப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் யாழ்.செயலகம் மேற்கொண்டு வருவதாக யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையின் முதற்கட்டமாக இக் களஞ்சியம் அமைந்துள்ள பகுதிகளில் காணப்படும் வெடி பொருட்களை அகற்றுவதற்கும் நடவடிககை எடுக்கப்பட்டுள்ளது. இதைத தொடர்ந்து ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(க,லி)

## வன்னி மக்களுக்காக ரூ.14.5 மில்லியன் மாவட்ட அரச அதிபர்களிடம் கையளிப்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா அரச செயலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்ற வைபவம் ஒன்றில் வன்னிப் பகுதிக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு உதவிகளை அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவு - கிளிநொச்சி மாவட்டங்கள் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்ட ஈடாக ஆறு மில்லியன் ரூபாவையும், ஏழு மில்லியன் ரூபா பெறுமதியுடைய வைத்திய உபகரணங்களையும், மாணவர்களுக்காக 1.5 மில்லியன் ரூபா பெறுமதியான கணினிகள் மற்றும் ஜெனரேற்றர்களையும் அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன மாவட்ட அரசாங்க அதிபர்களிடம் கையளித்துள்ளார்.

அத்துடன் இராணுவத்தினர் சார்பில் பிரிகேடியர் சனத் கருணாரட்ணவினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 100 சக்கர நாற்காலிகளும் இவ்வைபவத்தில் ஒப்படைக்கப்பட்டன. மேலும் 800 சக்கர நாற்காலிகளை இராணுவம் வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## தாய்வான் சுகாதார அமைச்சர் தலைமையில் கண்சிகிச்சை நிபுணர்கள் யாழ். வருகை!




யாழ். வந்துள்ள தாய்வான் மருத்துவர்கள் குழு

(யாழ்ப்பாணம்)

றோட்டறிக் கழகங்களின் ஏற்பாட்டில் யாழ்.போதனா வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சை முகாம் ஒன்றினை நடாத்துவதற்கு தாய்வான் சுகாதார அமைச்சர் தலைமையிலான மருத்துவக் குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவ்வைத்தியக் குழுவில் பதினைந்து வைத்திய கலாநிதிகளும் பன்னிரண்டு கண் சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர்களும் அடங்குவர்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வருகைதந்த இக்குழுவினருக்கு காலை 9.30 மணியளவில் யாழ்.மாநகர முதல்வர் செல்லன் கந்தையன தலைமையில் வரவேற்பளிக்கப்பட்டது.

தாய்வான் அரசிற்கும் இலங்கை அரசிற்கும் நேரடியாக தொடர்புகள் இதுவரையும் இருந்ததில்லை. இப்போதுதான், அதுவும் றோட்டரிக் கழகத்தின் மூலம் ஓர் தொடர்பு கிடைத்திருக்கின்றது. இதனை நினைத்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம் என தாய்வான் சுகாதார அமைச்சர் சூரி சூயு நேற்று நடாத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இப்பத்திரிகை மாநாட்டில் சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் இங்கு வந்து சிகிச்சை முகாமை நடாத்துவதற்கு இரண்டரைக் கோடி ரூபா ஒதுக்கியுள்ளோம். நாம் 200 கண்வில்லைகளை இங்கு கொண்டு வந்துள்ளோம். இவை யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெறும் கண்சிகிச்சை முகாமின் போது உரிய நோயாளர்களுக்கு பொருத்தப்படும். தாய்லாந்து பணத்தில் ஐந்து மில்லியன் மதிப்புள்ள மருந்து வகைகளும், சிகிச்சை உபகரணங்களையும் கொண்டு வந்துள்ளோம்.

நாம் இலங்கையில் முதல் யாழ்ப்பாணத்தில்தான் இக்கண் சத்திர சிகிச்சை முகாமை நடாத்துகிறோம். நாம் யாழ்ப்பாண மக்களுடன் அன்பாக இருக்க விரும்புகிறோம். இம் மக்களுடன் அடிக்கடி தொடர்புகளை ஏற்படுத்த விரும்புகிறோம். நாம் நடாத்தும் இக்கண் சத்திர சிகிச்கை முகாமின் மூலம் யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் மிகவும் பயனடைவார்கள் என நினைக்கின்றோம். நாம் இங்கு கண்சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கென புதிய நவீனகரமான இயந்திரங்களைக் கொண்டு வந்துள்ளோம். இவ் இயந்திரத்தின் மூலம் இலகுவாகவும் சுகமாகவும் கண்சத்திர சிகிச்சையை மேற்கொள்ளமுடியும் என்றார்.

நான் தாய்வான் அமைச்சர் என்ற ரீதியில் இங்குள்ள நிலைமைகளையும் மக்களின் துன்ப துயரங்களையும் தாய்வான் அரசிற்கு எடுத்துச் சொல்வேன். இதன் மூலம் மேலும் பல உதவிகளை, சிகிச்சை முகாம்களை எம்மால் செய்ய முடியும் எனவும் தாய்வான் சுகாதார அமைச்சர் சூரி சூயு தெரிவித்தார்.

பின்பு தாய்லாந்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தை பற்றி அமைச்சரிடம் பத்திரிகையாளர் கேட்டபோது 'எதிர்காலத்தில் நல்ல அபிவிருத்தியையும், சமாதானத்தையும் தோற்றுவிக்க இப்பேச்சுவார்த்தைகள் நல்ல பயனைத் தரும்' என தாய்வான் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

(லி)

## மாகாணசபை உறுப்பினர் தாய்லாந்துக்கு சுற்றுலா!

### விசாரணை நடத்தக் கோருகிறது ஜே.வி.பி.

(கொழும்பு நிருபர்)

வடமேல் மாகாண சபையின் 42 உறுப்பினர்கள் தாய்லாந்து நாட்டிற்கான உல்லாசப் பயணத்தை மேற்கொண்டதன் மூலம் மாகாண சபைக்கு 62 லட்சம் ரூபா இழப்பினை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தாய்லாந்தில் கருத்தரங்கு ஒன்று இடம்பெறுவதாகப் போலியான அழைப்பிதழ் ஒன்றைச் சமர்ப்பித்தே 42 மாகாண சபை உறுப்பினர்களும் அரசாங்கச் செலவில் பயணத்தை மேற்கொண்டிருப்பது தெரியவந்திருக்கின்றது. ஆனால் இவர்கள் தனிப்பட்ட பயணங்களை மேற்கொண்டதாகவும் இதனால் ஒருவருக்கு 1.5 லட்ச ரூபா அரசு செலவிட நேர்ந்ததாகவும் கூறப்படுகின்றது.

தாய்லாந்து நாட்டுக்குச் சென்று வந்த இந்தக் குழுவில் பொ.ஐ.மு. மற்றும் ஐ.தே.க. மாகாண சபை உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர். இது தொடர்பாக விசாரணைகளை நடத்த வேண்டும் என ஜே.வி.பி. கோரிக்கை விடுத்துள்ளது.

## சாலைக் கடலில் கடற்புலிகள் அதிவேக படகுகளில் பயிற்சி!

### கடற்படை குற்றச்சாட்டுத் தெரிவிப்பு

(கொழும்பு நிருபர்)

முல்லைத்தீவு - சாலைக்கடற் பகுதியில் நேற்று முன்தினம் காலை கடற்புலிகள் 6 அதிவேகப் படகுகளில் பயிற்சியில் ஈடுபட்டதாக கடற்படை குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் 5மணி நேரத்துக்கு இப்பயிற்சிகளில் கடற்புலிகள் ஈடுபட்டதாகவும் இதனை தமது மூன்று பீரங்கிப் படகுகள் அவதானித்து கிழக்குப் பிராந்திய கடற்படைத் தலைமைக்கு அறிவித்ததாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இது குறித்து கண்காணிப்புக் குழுவிடம் தாம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் கடற்படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாவற்குழி ம.வி. மாணவர்களுக்கு

நாவற்குழி மகா வித்தியாலயத்தினூடாக க.பொ.த. (சா.த.) பரீட்சைக்கு விண்ணப்பித்து வேறு பாடசாலையில் தற்காலிகமாகக் கல்வி பயிலும் மாணவர்கள் தரம் 10, 11இற்கான கணிப்பீட்டுப் புள்ளிகளை நாளை 13ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலையில் சமர்ப்பிக்குமாறு அதிபர் பி.முத்துலிங்கம் கேட்டுள்ளார்.

### றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.56 |
| சுபஹ் | 5.11 |
| உதயம் | 6.30 |
| லுஹர் | 12.26 |
| அஸர் | 3.48 |
| மஃரிப் | 6.20 |
| இஷா | 7.32 |

# சமஷ்டியின் தத்துவார்த்தப் பின்னணி; ஒரு பரிணாம வளர்ச்சி நோக்கு!

## சுயநிர்ணயம் ~ ஒருபார்வை பகுதி 07

## வேலும்மயிலும் சேந்தன்

இக்கட்டுரைத் தொடரிலே தற்போதைய உலகச் சூழ்நிலைக்கு ஏற்ப - அதன் அரசியல், பொருளியல் பரிமாணங்களுக்கு ஏற்ற



விதத்தில் சுயநிர்ணயம் என்ற கருத்தியல் கருவி (Idiological Tool) எவ்வாறு கையாளப்பட்டு வருகின்றது என்பது பற்றி பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைய கட்டுரையின் பார்வைப் புலமானது - சமஷ்டி என்றால் என்ன? அதன் தத்துவார்த்தப் பின்னணி என்ன? என்பதுடன், சமஷ்டியின் வரலாற்றுப பரிணாம வளர்ச்சியையும் நோககும்.

சமஷ்டியாட்சி என்பது இரண்டு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட நட்பு நாடுகளுக்கு இடையிலான உடன்படிக்கையின் பிரகாரம் நடைபெறும் ஆட்சி முறைமையை குறிப்பதாகும். 'Federalism' என்ற ஆங்கிலச் சொல்லானது 'Foedus' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததாகும். இங்கே 'Foedus' என்பது நட்பு நாடுகளுக்கிடையிலான உடன்படிக்கையைக் குறிப்பதாகும்.

சமஷ்டி ஆட்சி முறைமையானது, இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் பிரபல்யம் பெற்ற அரசியற் கோட்பாடுகளை விளக்குவதாக அமைகிறது. எனினும், சமஷ்டிக்கான ரிஷிமூலம் கிரேக்க நகர அரசுகளின் (City States) தோற்றங்களுடன் ஆரம்பமாகின்றது. கிரேக்க நகர அரசுகளிலிருந்து ரோம சாம்ராச்சியங்கள், மத்திய காலத்து இத்தாலிய - நகரச் சங்கங்கள (City Unions), 13ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் உருவான சுவிஸ் நாடுகளின் கூட்டமைப்பு, 16ஆம் நூற்றாண்டில் உருவான ஐக்கிய நெதர்லாந்து, 17 ஆம் நூற்றாண்டில் உருவான டச்சு நாடுகளின் கூட்டமைப்பு என்பவற்றில் இன்று பேசப்படும் சமஷ்டி அமைப்பின் சாயல்கள் காணப்பட்டன.

ஆனால் இவற்றைப் பூரண மான சமஷ்டியாக இன்று கருத முடியவில்லை. மாறாக இன்றைய சமஷ்டி முறைமைக்கான தோற்றுவாய்களாகவே இவை காணப்பட்டன. ஆனால் இவ் வாட்சிமுறைமை 1787 ஆம் ஆண்டு அமெரிக்க அரசியல் திட்டத்தில் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டதும், பின்பு அதற்கேற்ப அமெரிக்கா சமஷ்டி முறைமையைப் பின்பற்றியதும் -சமஷ்டி முறைமையை புதிய பரிமாணங்களைக் கொண்ட ஆட்சி முறையாக இன்றைய உலகிற்கு வடிவமைத்துக் கொடுத்தன.

இன்று அரசியல் கோட்பாடுகளின் வரலாற்றில் அமெரிக்க சமஷ்டி முறைமையே முதலாவது சமஷ்டி முறையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கிரேக்க நகர அரசுகளில் தோற்றம் பெற்ற சமஷ்டி முறைமையானது 18 ஆம் நூற்றாண்டில் ஒரு முழுமையான கட்டத்தை வந்தடைந்தது எனலாம்.

சமஷ்டி ஆட்சி என்பது அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்டு, பரவலாக்கப்பட்ட ஒரு அரசாங்க முறைமை எனச் சுருக்கமாக வரையறுக்கலாம். சமஷ்டியமைப்பிலே மத்தியப்படுத்தப்பட்ட அரசு ஒன்று மையத்திலே இருக்க; அதன் அரசியல் அமைப்புக்குட்பட்ட சில வரையறைகளுடன் சில மாநிலங்களோ அல்லது அரசுகளோ தங்களது தனித்துவத்தை இழக்காது, பொது நன்மைகளை அடையும் பொருட்டு பன்முகப்படுத்தப்பட்ட அதிகார வரன்முறைகளுக்கு ஏற்ப இயங்கும் ஒரு ஆட்சிமுறைமையே சமஷ்டி முறைமையாகும். இந்த வகையில் மத்திய- மாநில அரசாங்கங்கள் தமக்கு வரையறுக்கப்பட்டிருக்கும் நிர்வாகப் பரப்பு எல்லைக்குள ஆதிக்கம் உடையதாக விளங்குவதைக் குறிக்கும். இங்கு குறிப்பிடப்படும் "நிர்வாகப் பரப்பு எல்லைக்குள் ஆதிக்கம்" என்பது ஒரு அரசினது இறைமை பகிரப்பட்டிருப்பதனைக் குறித்து நிற்கும். இங்கு மத்திய அரசிற்குப் புறம்பாக மாநில அரசு சட்டவாக்க அதிகாரத்தினை தனக்கு வரையறுக்கப்பட்ட விடயப்பரப்பிற்குள் (தனக்கு ஒதுக்கப்பட்ட விடயங்களில்) கொண்டிருப்பது அவசியமானதாகும்.

இதற்குப் புறம்பாக இதன் எதிர்மறையாக ஒற்றை ஆட்சி விளங்குகின்றது. ஒற்றை ஆட்சி என்பது, அதிகாரத்தின் மையம் ஒரு இடத்தில் குவிந்திருப்பதனைக் குறிக்கும். மத்திய அரசே சட்டவாக்க அதிகாரத்தையும், இறைமையை தன்னகத்தே மாத்திரம் கொண்டமைந்திருக்கும் இவ்வொற்றை ஆட்சிமுறைமையிலிருந்து, நேரடியாக சமஷ்டி முறைமைக்கு அரசியற் கோட்பாடு திடீர் மாற்றங்களுக்கு வந்தவையல்ல. மாறாக ஒற்றையாட்சிக்கும் சமஷ்டிக்கும் இடைநடுவில் "நாடுகளின் கூட்டம்" (Confederation) என்ற நிலை விருத்தி பெற்றிருந்தது. நாடுகளின் கூட்டம் (Confederation) என்ற நிலையிலிருந்து விருத்தியானதே சமஷ்டி முறமையாகும். 1787 இல் அமெரிக்க அரசுகளுக்கு சமஷ்டி முறைமை வருவதற்கு முன், அரசுகளுக்கிடையே காணப்பட்ட ஒற்றுமையானது நாடுகளின் கூட்டம் (Confedration) என்ற வடிவிலேயே காணப்பட்டது.

இந்நாடுகளின் ஒற்றுமையானது நாடுகளின் தொகுதிகளாகக் காணப்பட்டதேயன்றி, பல நாடுகளும் இணைந்து பலமான அரசை உருவாக்க மேற்கொண்ட முயற்சியாகக் காணப்படவில்லை. கட்டளையாகவும் தீர்மானங்களாகவும் காணப்பட்ட சில ஒழுங்குகளின் கீழ், முழுமை பெறாத அமைப்புகளாக விளங்கினவேயன்றி, சட்டவாக்க அதிகாரத்துடன் இணைந்த விதமாக உருவாக்கப்பட்ட அமைப்பு முறையாக இவை அமையவில்லை. 1291 இல் மூன்று கன்டன்கள் (Candans) இணைந்து உருவாக்கிய சுவிஸ் நாட்டுக் கூட்டமைப்பும், 1781-1789 காலப்பகுதியில் பிரித்தானியாவிற்குப் பயத்தினால் அமெரிக்கா உருவாக்கிய பதின் மூன்று நாடுகளின் கூட்டமும், 1815 இல் நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பின் 1815-1866 வரையான காலப் பகுதியில் 39 ஜேர்மனிய நாடுகள் இணைந்து உருவாக்கிய நாடுகளின் கூட்டமும் - இவற்றுக்கு உதாரணங்களாகக் கூறலாம்.

*ஒற்றையாட்சியிலிருந்து சமஷ்டி முறைமையை நோக்கிய அரசியற் கோட்பாட்டு வளர்ச்சியில் இடைக் காலப்பகுதியில் உருவானதே "நாடுகளின் கூட்டம்"(Confederation) ஆகும்.*

*மாறாக, நாடுகளின் கூட்டமானது சமஷ்டி அமைப்பைப் போல் தெளிவான சட்டவாக்கத்தையோ அல்லது நிர்வாக வரையறைகளுக்குள் இறைமையைக் கொண்டமைநததாகவோ இல்லை. எனவே "சமஷ்டி முறைமைக்குச் (Federalism) சமாந்தரமாக நாடுகளின் கூட்டத்தினை (Confederation) வைத்துப் பார்ப்பது சரியானதல்ல. மாறாக, நாடுகளின் கூட்டத்திலிருந்து (Confederation) விருத்தியாக்கப்பட்ட அரசியற் கோட்பாடே சமஷ்டி (Federalism) முறைமையாகும்.*

சமஷ்டி ஆட்சிமுறை தெளிவான அரசியல் திட்ட வரையறைகளுடனும், நெறிமுறைகளுடனும், இறைமையின் மேலாதிக்கத்துடனும் குறித்த மத்திய-மாநில அரசுகளுக்கிடையேயும் அதன் ஆள்புலத்திற்கும் இடையே பிரயோகிக்கப்படுகின்றது.

ஆனால் - அன்று மிகப்பெரிய நிலப்பரப்புக்களைக் கொண்டு நாடுகளுக்கும், இனரீதியாக, மதரீதியாக, கலாசார ரீதியாக, பொருளாதார ரீதியாக வேறுபாடுகளைக் பிரதிபலிக்கும் மக்கள் தொகையை கொண்ட நாடுகளுக்கு மிகவும் பொருத்தமான ஆட்சி முறையாக இருந்த சமஷ்டி முறையானது - இன்று எவ்விதம் நோக்கப்படுகின்றது, கையாளப்படுகின்றது என்பதை எல்லைகள் கடந்த பல் தேசியக் கம்பனிகளின் நோக்கில் கடந்த வாரங்களில் பார்த்ததை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

சமஷ்டி அரசியற் கோட்பாடானது, மரபுவாதச் சமஷ்டிக் கோட்பாடு (Classical Theory), சமஷ்டியின் தோற்றப்பாட்டுக் கோட்பாடு (Origin Theory), மற்றும் சமஷ்டியின் செயற்பாட்டு வாதக் கோட்பாடு (Functional Theory) என மூன்று வகைக் கோட்பாடுகளாகக் காணப்படுகின்றன.

சமஷ்டியின் மரபுவாதக் கோட்பாடானது, சமஷ்டி என்றால் என்ன? என்பதனை விளக்குவதாக அமையும். இக்கோட்பாடானது, குறித்த சமஷடி அரசின் அரசியல் திட்டத்தின் பிரகாரமும் அரசாங்க முறைமையின் பிரகாரமும் (Based on the Constitution and system of Government) வடிவமைக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறான மரபுவாதச் சமஷ்டி முறைமைக்கு- ஐக்கிய அமெரிக்கா, சுவிற்சலாந்து, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளை உதாரணங்களாகக் கூறலாம். மரபுவாதக் கோட்பாடானது, சட்டவாக்கத்தின் வரையறைகளுடன் சமஷ்டியைக் கையாளுவது வழமை. இச்சட்டத்தின் வலு மூலமே சமஷ்டியானது (Federalism) நாடுகளின் கூட்டத்தில் (Conferation) இருந்து வேறுபட்டு அமைகின்றது. எனவே சமஷ்டி முறைமைக்கு இறுக்கமான சட்டவரைபை மரபுவாதக் கோட்பாடானது கொடுத்து தவுவதுடன் நிறைவு பெறுகின்றது. சமஷ்டியை தெளிவான நிறுவனங்கள் மூலம் (Through institutions) மரபுவாதக் கோட்பாடு செயற்படுத்துகின்றது என்பது தெளிவானதாகும்.

அடுத்து, சமஷ்டியின் தோற்றவாதக் கோட்பாடானது (Origin of Theory of Fedaralism), எவ்வெவ் வகை பின்புலங்களைக் கொண்டமைந்தன் மூலம் சமஷ்டி முறைமை தோன்றியது என்பது பற்றிக் கூறுகின்றது.

சமஷ்டியின் தோற்றவாதக் கோட்பாட்டில் மூன்று உப கோட்பாடுகள் காணப்படுகின்றன. அவையாவன

I. சமூகவியல் உப கோட்பாடு (Sociological Sub Theory)

II. பல்காரணி உப கோட்பாடு (Multiple Factor Sub Theory)

III. அரசியற் உப கோட்பாடு (Political Sub Theory)

இவை முறையே, சமஷ்டி, எவ்வாறு குறித்த புவியியல் பரப்பில் தோற்றம் பெற்றது என்பதனை விளக்குவதாக அமைந்தன. இதில் சமூகவியற் கோட்பாடனது - குறித்த சமூகத்தில் மனித வாழ்வு, அவர் களின் நடத்தைக் கோலங்கள், பழக்கவழக்கங்கள், கலாசாரங்கள், மொழி என்பன எவ்வாறு சமூகத்தை உப கலாசாரக் குழுக்களாக வகைப்படுத்துகின்றன என்பதையும், அவ்வாறு உருவாகிய உப கலாசாரக் குழுக்களை அரசியல் ஒருமைப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு இச்சமூகவியற் கோட்பாடு சமஷ்டி முறைமைக்கு எவ்வாறு உதவுகிறது என்பதையும் எடுத்துக்கூறுகிறது.

இச் சமூகவியல் உப கோட்பாட்டிற்கு உதாரணங்களாக வேலஸ், ஸகொற்லாந்து, ஐரிஷ் அடங்கிய ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், சீனா, தென்னாபிரிக்கா, இந்தோனேசியா என்பவற்றை உதாரணங்களாகக் கூறலாம்.

அடுத்துப் பல்காரணி உப கோட்பாட்டினை எடுத்துக் கொள்வோமாயின் - தற்காலத்தில் சமஷ்டி எவவாறு உருவாகின்றது என்பதிலும் பார்க்க எவ்வாறு உருவாக்கப்படுகின்றது என்பதற்கு அடிப்படையாக உள்ள அம்சங்களை எடுத்து ஆராயவதாக அமையும்.

இதன்படி பின்வரும் காரணிகள் (Factors) சமஷ்டியின் உருவாக்கத்திற்கான மூலகங்களாக அமையும். அவையாவன :-

(1) இணைவதற்கான விருப்பம் (The Desire for Union) - அதாவது குறிக்கப்பட்ட சில பொது நன்மைகளை எய்துவதனை நோக்கமாகக் கொண்டு ஒரு மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இயங்க வேண்டும எனற விருப்பத்தினை இது குறித்து நிற்கும்.

(2) புவியியல் அண்மை (Physical Contiguity)

அதாவது சமஷ்டி நாடுகளாக இணைய விரும்பும் நாடுகள் புவியியல் ரீதியாக, தொடர்ச்சித தன்மையானதாகவும் அருகாமையில் இருப்பதாகவும் அமைய வேண்டும் என்பதனை இக்காரணி வலியுறுத்துகின்றது.

(3) சமூகநலன் (Community of Interests)

வேறுபட்ட மத, மொழி, கலாச்சார மக்கள் - சமஷ்டி முறையில் இணைவதால் அம்மக்கள் கூட்டத்தினரின் மத, மொழி மற்றும் கலாசார விழுமயங்கள் பேணப்படுவதனை உறுதப்படுத்தும் சமூகநலன் அவசியமானதாகும்.

(4) அரசியற் சமுதாய நிறுவனங்களின் ஒத்ததன்மை. (Similarity of Social and Political Institutions)

சமஷ்டி அரசை உருவாக்கும் அரசுகளிற்கிடையே அரசியற் சமுதாய நிறுவனங்கள் ஒத்த தன்மையுடையதாக அமைதல் வேண்டும். அதாவது, ஒரே மாதிரியான ஆட்சி முறைமை எல்லாம் சமஷ்டி நாடுகளிலும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறாயின் தான் சமஷ்டி தன்னியக்கமாக இயங்கமுடியும்.

சமஷ்டியின் தோற்றவாதக் கோட்பாட்டில் இறுதியாக அமையும் உப கோட்பாடானது, அரசியற் கோட்பாடாகும். அதாவது, குறித்த நாட்டின் புவியியற், அரசியற் பரப்பிற்குள் நிலவும் அரசியல் முரண்பாட்டின் காரணமாக அம்முரண்பாட்டை நீக்கவும், அரசினது நல்லாட்சியினை (Good Gevernance) உறுதிப்படுத்தும் வகையிலும் சமஷ்டியினை தோற்றுவிப்பதனை இக்கோட்பாடு குறித்து நற்கும். அதாவது முரண்பாடுகள் மறறும் போர் போன்றவையைத் தீர்க்க இக்கோட்பாடு உதவும்.

இறுதியாக சமஷ்டியின் மூன்றாவது கோட்பாடாக (Functional Theory) அமைவது செயற்பாட்டு வாதக் கோட்பாடு ஆகும். அதாவது ஏலவே நிர்ணயிக்கப்பட்ட மத்திய - மாநில அரசுகள் சமஷ்டியின் கீழ் எவ்வாறு இயங்குகின்றன என்பதனை இக் கோட்பாடு வரையறுக்கும். இக்கோட்பாட்டின் அடிப்படையில் மத்திய அரசின் வரையறைகள் என்ன? மாநில அரசின் வரையறைகள் என்ன? என்பது தெளிவான செயற்பாட்டு வடிவத்தில் காணபடும்.

மேற்கூறிய அடிப்படையில் சமஷ்டியானது மரபு வாதக் கோட்பாடு, தோற்றவாதக் கோட்பாடு, செயற்பாட்டு வாதக் கோட்பாடு என மூன்று பெரும் கோட்பாட்டுகளின் அடிப்படையில் வரையறுக்கப்படும் போது - தோற்ற வாதக் கோடபாட்டில் மேலும் சமுதாய உப கோட்பாடு, பல்காரணி உப கோட்பாடு, அரசியல் உப கோட்பாடு என மூன்று உப கோட்பாடுகளும் காணப்படுகின்றன.

இன்று நாம் சமஷடி பற்றிய கருததாடலுக்கு இக்கோட்பாடுகள் வேண்டப்படும் அதேவேளை, எமது இனப் பிரச்சினைக்கான தீர்வாக சமஷ்டி முறைமை அரசியற் தீர்வாக ஆராயப்படலாம் என்ற பேச்செழும் இவ் வேளையில், நாம் சமஷ்டியின் எந்தக் கோட்பாடு எமககு மிகவும் வேண்டப்பட்டது, பொருத்தமானது என்பது பற்றிய தத்துவார்த்த ரீதியான தேடல் இன்று எமது சமூகத்திற்கு மிகவும் அவசியமானதும், காலத்தின் தேவையுமாகும்.

(பிரதி செவ்வாய் தொடரும்)

## இராணுவ உழவு இயந்திரம் மோதியதில் குடும்பஸ்தர் காயம்

(வண்ணை)

மட்டுவில் பகுதியில் இராணுவத்தினரின் உழவு இயந்திரம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் பலத்த காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் நடைபெற்ற இச்சம்பத்தில் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த இராசமாணிக்கம் இராசேந்திரம் (வயது-41) என்பவர் காலில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வீதியில் தீப்பிடித்து எரிந்த படையினரின் மோட்டார் சைக்கிள்

(புன்னாலைக்கட்டுவன்)

பலாலியை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்த - விசேட அதிரடிப் படையினரின் மோட்டார் சைக்கிளொன்று புன்னாலைக்கட்டுவன் ஆயர் கடவை சித்திவிநாயகர் ஆலயத்திற்கு முன்பாக திடீரெனத் தீப்பற்றிக் கொண்டது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு சிப்பாய்களும் - மோட்டார் சைக்கிளை விட்டுப் பாய்ந்ததில் காயங்கள் எதுவுமின்றித் தப்பிக் கொண்டனர்.

ஆலயத்தில் இருந்த தொண்டர்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டது. எனினும் மோட்டார் சைக்கிளின் ரயர் உட்பட பல பாகங்கள் எரிந்தன.

(83)

## சீனன்குடா விமானப்படை முகாம் சூழலில் மீன்பிடிக்க அனுமதி!

(நமது நிருபர்)

சீனன்குடா விமானப்படை முகாமிற்கு முன்பாக உள்ள கடற்பகுதியில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு வருடங்களாக இக்கடற் பகுதியில் மீன் பிடிப்பதற்கு விமானப் படையினர் தடைவிதித்திருந்தனர். இந்தத் தடை நீக்கப்பட்டிருப்பதோடு இரவு நேரத்தில் மீன் பிடிப்பதற்கும் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# ஆம்ஸ்ரோங்



**1970**களில் அமெரிக்க விண்வெளி வீரர்கள் ஆல்டிரின், கொலின், ஆர்ம்ஸ்ரோங் ஆகியோர் சந்திரனில் காலடி வைத்தார்கள் என்ற வரலாறு வெறும் கட்டுக்கதை என்ற ஒரு புதிய கதையை அவிழ்த்துள்ளனர் ஒரு அமெரிக்கப் புத்தகப் பதிப்பகத்தினர்.

இந்த சந்திரனில் காலடிவைத்த சம்பவம் வெறும் புரளி எனக் கூறும் இவர்கள் அதற்கு ஆதாரமாக சில விடயங்களையும் முன்வைக்

## சந்திரனில் இறங்கியது புரளியா?

கின்றனர்.

✷ அப்பலோ விண்கலம் சந்திரனின் தரையில் இறங்குவது போன்று ஒரு போலியான விவரணப்படமே வெளியானது.

✷ சந்திரனுக்கு அருகாமையில் எந்தவிதமான நட்சத்திரங்களும்



காணப்படவில்லை.

✷ காற்றே இல்லாத சந்திரனில் நாட்டப்பட்ட அமெரிக்கத் தேசிய கொடியில் காற்றில் ஆடுவதுபோல் சில அலைகள் காணப்ப டுவது எப்படி?

✷ சந்திரனில் விழும் நிழல்கள் ஒரே சமயத்தில் வெவ்வேறு திசையில் எப்படி தோன்றும்? போன்ற கேள்விகளை இந்தக் கொள்கையாளர்கள் எழுப்புகின்றனர்.

அமெரிக்கா விண்வெளி ஆய்வில் சோவியத் யூனியனை முந்திக் கொண்டுவிட்டதாகக் காட்டவே இந்த புரளிகள் என்கின்றனர் இவர்கள். இதற்கு எதிராக நாசா நிறுவனம் புத்தகம் ஒன்றை வெளியிடத் திட்டமிட்டது. விண்வெளித் திட்ட எழுத்தாளரான ஜிம் ஒபர்க் என்பவருக்கு இதற்கென நாசா 15,000 டொலர் நிதியையும் ஒதுக்கியிருந்தது. ஆனால் தற்போது இத்திட்டம் கைவிடப்பட்டுவிட்டது.



பல்சுவை அரங்கு





# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்

**அரங்கம் 07**



**மீ**ண்டும் காப்பகத்தின் ஆதரவில் செல்ல விரும்பாத சார்லி, தான் தன் சொந்தக்காரர்களுடன் இருக்கப் போவதாக அதிகாரிகளிடம் கூறினான். உண்மையில் அங்கிருந்து அவன் தங்களுடைய வெறுமையான அறைக்குத் தான் சென்றான். சிட்னி கடலிலிருந்து திரும்பும் வரை அங்கு தனிமையில் இருந்தான்.

ஹன்னா எப்போதும் போல் மோசமானதையே வைத்து விட்டுப் போயிருந்தாள். துவைக்க வேண்டிய துணிகளும், பாதிப்பொட்டலம் தேநீர் இலையும், மூன்று அரை பென்னி நாணயங்களையும் தவிர, வேறு உணவொன்றும் இருக்கவில்லை. அவள் சார்லிக்குக் கொடுப்பதற்காக வாங்கி வந்திருந்த பெப்பர்மின்டின் சிறுபை மேஜையில் கிடந்தது.

அடுத்த சில வாரங்கள் லண்டன் நகரத்துத் தெருக்களைச் சுற்றி வந்தான் சார்லி. அவன் தந்தை அவனுக்கு முன், கதவை அறைந்து பூட்டிய போது ஏற்பட்ட தனிமை அவனை மீண்டும் தொற்றிக் கொண்டது. அதிர்ஷ்டவசமாக அவனுக்குச் சில சிநேக குணமுடைய விறகு வெட்டிகளின் நட்புக் கிடைத்தது. அவர்களுக்காக வேலை செய்தான். அது ஒரு கம்பனி. அதன் முதலாளி சார்லிக்கு ரொட்டியும், கெட்டி வெண்ணெய்ப்பட்டையும் வாங்க இரண்டு பென்னி நாணயங்களைக் கொடுத்தார்.

சிட்னி வீடு திரும்பியதும், இருவரும் தாயைக் காணச் சென்றார்கள். அவளிடம் ஏற்பட்டிருந்த மாற்றம் அவர்களைத் திடுக்கிட வைத்தது. தனக்குப் பரிச்சயமான பழைய சூழ்நிலையிலிருந்து விலகி அவள் தன் வயமில்லாதவளாக, குழம்பியவளாகக் காணப்பட்டாள். அந்தக் குழப்பத்தினூடே சார்லியைப் பார்த்து அவள் கூறிய வார்த்தைகள் வெகுநேரம் அவன் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

"நீ மட்டும் எனக்கு ஒரு கோப்பைத் தேநீர் கொடுத்திருந்தால் நான் நன்றாக இருந்திருப்பேன்".

மோசமான நிலையிலும் கூட தன்னுள் அசாதாரண திறமை புதைந்து கிடப்பதாக சார்லி நம்பினான். அப்போது ஏழ்மையான இழித்தோற்றம் இருந்தாலும், ஒரு புதிய துவக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதில் அவன் தீவிரமாக இருந்தான். துணிவை வரவழைத்துக் கொண்டு, லண்டன் நகரின் நாடகக் குழுக்களுக்கான செயல்களில் சிறந்தவர் ஒருவரைக் காணச் சென்றான்.

அங்கிருந்த குமாஸ்தா, 14 வயது சிறுவனைப் பார்த்தான். அவன் ரொம்பவும் சிறியவனாக, துல்லியமான முகத்தோற்றம் உடையவனாக, சிறிய கை, கால்கள் உடையவனாக, கருமையான சுருள் முடியுடனும், அழகான பற்களுடனும் இருந்தான். மொத்தத்தில் துடிப்புள்ள அழகான சிறுவனாகத் தெரிந்தான். அந்தக் குமாஸ்தா சார்லஸ் ஸ்பென்சர் சாப்ளினின் பெயரைத் தன் குறிப்பேட்டில் சேர்த்துக் கொண்டார்.

விரைவிலேயே சார்லி தங்கியிருந்த அறைக்கு ஒரு தபால் அட்டை வந்தது. படபடக்கும் இதயத்துடன் அவன் அந்த அலுவலகத்திற்குச் சென்றான். அனுபவமே இல்லாத அவனுக்கு "ஷெர்லக் ஹோம்ஸின்" புதிய தயாரிப்பொன்றில், பில்லி என்ற பணிப்பையனின் நல்ல வேடம் கொடுக்கப்படவிருந்தது. பிரபல நடிகர் எச்.ஏ.ஸெயின்ஸ் பெர்ரி தான் கதாநாயகனாக நடிப்பதாக இருந்தார். 'ஜிம் எ ரோமான்ஸ் ஒவ் கொக்கெயின்' என்ற ஸெயின்ஸ் பெர்ரியின் நாடகத்திலும் அவனுக்கு இன்னொரு வேடம் கிடைக்க வாய்ப் பிருந்தது. ஹோம்ஸின் தயாரிப்பு உருவாகும் வரை இந்நாடகம் நடைபெறுவதாயிருந்தது.

ஆடம்பரமான, மதிப்பிற்குரிய ஒப்பனை அறைச் சங்கத்திற்கு நடிகர் ஸெயின்ஸ் பெர்ரியைச் சந்திக்க சார்லி அனுப்பப்பட்டான். அவனுடைய வாழ்க்கை அவனைக் கூச்ச குணமுடையவனாக்கி விட்டிருந்தது. அவனுடைய இந்தக் குணம் புரியாமல் மற்றவர்கள் அவனை கர்வம் கொண்டவன் என்று தவறாக எண்ணினர். ஆனால் ஸெயின்ஸ் பெர்ரிக்குச் சார்லியை மிகவும் பிடித்துப் போனது. அவனைக் கொஞ்சம் கொஞ்சமாக அந்தச் சூழ்நிலைக்கு ஒத்திசைவாக்கினார்.

ஒத்திகைகள், சார்லி அது வரை பார்த்திராத வண்ணம் இருந்தன. காரணம், சார்லி அது வரை நாடகங்களில் நடித்தது கிடையாது. ஆனால் ஸெயின்ஸ் பெர்ரி பொறுமையாக இருந்தார். சார்லியும் சுறுசுறுப்பாக எல்லாம் கற்றுக்கொண்டான். அவனால் சரியாகப் படிக்கக்கூட முடிய வில்லை. ஆனால் அவன் பேச வேண்டிய வரிகளை சிட்னி அவனுக்குப் படித்துக்காட்ட மூன்று நாட்களில் சார்லி அட்சரம் பிசகாமல் அவைகளைப் பேசுமளவிற்குத் தயாராகி விட்டான்.

'ஜிம்' ஒரு மாபெரும் தோல்வியாக அமைந்தது. அது உற்சாகம் குலைந்து போகக் கூடிய விஷயமாக இருந்திருக்கலாம். ஆனால் அந்தக் காட்சியில் கண்டெடுக்கப்பட்ட மாபெரும் விஷயம் சார்லி சாப்ளின்.

"நான் இதுவரை அந்தப் பையனைப் பார்த்ததில்லை. ஆனால் எதிர்காலத்தில் அவனைப் பற்றி மேன்மையான விஷயங்கள் கேள்விப்படுவேன் என்று நம்புகிறேன்" என்று ஒருவர் எழுதினார்.

1903ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 7ஆம் நாள் பிரம்மாண்ட மான "பெவிலியன் அரங்கில்" ஷெர்லாக் ஹோம்ஸ் துவக்கப்பட்டது. கொஞ்ச நாட்கள் நாடகம் நடந்தேறிய பிறகு அவர்கள் வெளியூர்களில் காட்சிகள் நடத்தச் சுற்றுப் பயணம் கிளம்பினார்கள்.

சார்லி, இரவோடு இரவாக மாறிவிட்டது போலிருந்தது. அவன் செய்ய வேண்டியதைக் கண்டறிந்து செய்வது போலிருந்தது. அன்பான, கருணையுள்ள திறமைசாலியான சிட்னியும் மேடையில் புகழ்பெற்றிருக்க வேண்டியவன்தான். ஆனால் அவனுக்கு அது வாழ்க்கையில் ஓர் அங்கமான வேலையாக மட்டுமே தெரிந்தது. சார்லிக்கோ அவன் வேலைதான் அவன் உலகம்! மற்ற விஷயங்களெல்லாம் அதோடு ஒட்டப்பட்டவைகளாகத் தெரிந்தன.

சிட்னிக்கும் ஒரு சிறிய வேடம் கொடுக்கத் தனது நிர்வாகத்தைச் சம்மதிக்க வைத்தான் சார்லி. ஹன்னாவின் மனநிலை சிறிது தேற, கொஞ்ச நாட்களுக்கு மூவரும் சேர்ந்தே பயணம் செய்தார்கள். தனது மகன்களின் வெற்றியைக் கண்டு ஹன்னா பூரித்துப் போனாள்.

*(அடுத்த அரங்கில் தொடரும்)*

# அலாஸ்கா பகுதியில் வெடிப்பு!



**அ**ண்மையில் அமெரிக்காவில் அலாஸ்கா பகுதியில் ஏற்பட்ட பெரும் நில நடுக்கத்தினால் அங்கு 230 கிலோ மீற்றர் நீளத்திற்குப் பெரும் வெடிப்பு ஒன்று பூமியில் ஏற்பட்டுள்ளது. உயிரிழப்புகள் இல்லாத இந்த நில நடுக்கம் ரிச்டர் அளவில் 7.9 ஆகப் பதிவாகியுள்ளது.

எனினும், உலகப் பிரசித்திபெற்ற மிக நீண்ட எண்ணெய் கொண்டுசெல்லும் ட்ராண் - அலஸ்கன் குழாய்களில் பொறியியலாளர்கள் எதிர்வுகூறியது போன்று எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. பூமியின் இரண்டு தட்டுப் பாறைகள் ஒன்றோடு ஒன்று அருகாக உராய்ந்து சென்றமையே இந்தப் பூமியதிர்ச்சிக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. இந்த உராய்வு ரொக் பெரு வீதியருகிலேயே நடைபெற்றுள்ளது. இந்த பூமியதிர்வு மூலம் பல தரவுகளைப் புவியியல் ரீதியாக பெற்றுக்கொள்ள முடிகிறது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.



பெருந்தெருவுக்கு இடப்பக்கமாகச் செல்கிறது ட்ரான்ஸ் - அலஸ்கன் எண்ணெய்க் குழாய்.



பாதிக்கப்பட்ட பெருந்தெரு இரண்டரை மீற்றருக்கு குழி விழுந்து செல்வதைப் படத்தில் காணலாம்.



பயணம் புறப்பட்ட போது டைட்டானிக்.

# டைட்டானிக்குடன் மூழ்கிய குழந்தை

கடந்த நூற்றாண்டின் மோசமான கடல் விபத்து எனக் கூறப்படும் டைட்டானிக் கப்பல் விபத்தில் கொல்லப்பட்ட 1503 பயணிகளில் அடையாளம் காணப்படாமல் புதைக்கப்பட்ட ஒரு குழந்தையின் அடையாளத்தைக் கனேடிய விஞ்ஞானிகள் மரபணு பரிசோதனை (D.N.A. Test) மூலம் கண்டுபிடித்துள்ளனர்.

பெல்பாஸ்டில் உருவாக்கப்பட்ட இந்த டைட்டானிக் கப்பல், சௌத்தாம்டனிலிருந்து நியூயோர்க் வந்து கொண்டிருந்தபோது 1912 ஏப்ரல் 15ஆம் நாள் பனிப் பாறையில் மோதிக் கடலில் மூழ்கியது. இதில் கொல்லப்பட்டவர்களில் இந்தக் குழந்தையும் அடங்கும். குழந்தையின் சடலம் சம்பவம் இடம்பெற்ற ஒரு வாரத்தின் பின் குளிர்ந்த வட அடலாண்டிக் கடலில் மிதந்து கொண்டிருக்கும்போது மீட்கப்பட்டது.

அக்குழந்தையின் சடலம் நோவாஸ்கொற்றியாவிலுள்ள ஹலிபக்ஸ் எனும் மயானத்தில் அடையாளம் தெரியாத குழந்தை எனப் புதைக்கப்பட்டது. இக்குழந்தையுடன் இவ்விபத்தில் பலியான மேலும் 150 பேரின் சடலமும் இம்மயானத்தில் புதைக்கப் பட்டது.

இக்குழந்தையின் சடலத்தின் எஞ்சிய பகுதிகளைத் தற்போது பரிசோதித்த ஒன்ராறியோ லேக்ஹெட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இக்குழந்தை யார் என்பதை மரபணுச் சோதனையில் கண்டுபிடித்துள்ளனர். இக் குழந்தை 13 மாதங்கள் நிறைந்த ஈனோ பனுலா என்ற பெயருடையது என்றும் இதன் மரபணு பின்லாந்து நாட்டில் வசிக்கும் இதன் குடும்பத்தினரின் மரபணுவுடன் ஒத்துப்போகின்றது எனவும் இவ்வாய்வாளர்கள் கூறி யுள்ளனர்.

இக்குழந்தை தாயுடன் புதிய வாழ்வை அமெரிக்க மண்ணில் தொடங்கவென கப்பலில் ஏறியுள்ளது. இவர்கள் வரவைத் தந்தை அமெரிக்க மண்ணில் ஆவலுடன் நின்று எதிர்பார்த்து ஏமாந்தே போனார்.

ஆய்வாளர்கள் குழந்தையின் மணிக்கட்டு என்புத் துண்டு ஒன்றையும் மூன்று பற்களையும் புதைகுழியிலிருந்து கடந்த ஆண்டு மீட்டு ஆய்வுக்குட்படுத்தினர். குழந்தையின் சடல எச்சப் பகுதிகள் மீள வெளியெடுக்கப்பட்டு அதன் சொந்த நாடான பின்லாந்தில் புதைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



கடலுக்கு அடியில் ஓய்வெடுக்கிறது டைட்டானிக்.

# எரிமலையைப் படம்பிடித்த விண்வெளி வீரர்கள்



விண்ணில் சுயாதீனமாகச் சுற்றித்திரியும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள விண்வெளி வீரர்களினால் சிசிலி நாட்டின் ஈட்னா எரிமலை வெடிப்புகளை மிகத் தெளிவாக படம்பிடிக்கக் கூடியதாக இருந்ததாம். 11 ஆயிரம் அடி உயரமான மலையிலிருந்து எரிமலைக்குழம்புகள் வெளியேறுவதையும் புகையும் தூசும் ஒளிக் கிளம்புவதையும் இவர்கள் படம் பிடித்துள்ளனர். எரிமலையிலிருந்து எழும் புகை கிழக்காக நகர்ந்து ஆபிரிக்கா நோக்கி செல்வதை இவர்கள் கண்டுள்ளனர்.

மலையின் கீழ் அடிவாரத்தில் தெரியும் புகைமண்டலம் எரிமலைக்குழம்பு வடிந்து செல்கையில் தீப்பற்றிக் கொண்ட 'பைன்' மரங்கள் எரியும்போது ஏற்படும் புகையாகும். இந்த எரிமலை வெடிப்பு சிசிலிக்கு அருகேயுள்ள ஒரு தீவில் ஒக்டொபர் 27ஆம் திகதி ஏற்பட்டதாகும்.

# ஆழமான அன்புத் தொடர்பே விவாகம்

**கடந்த வாரத் தொடர்ச்சி....**

சொத்து, பணம் இருந்தும் தற்கொலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டமை உறவு உடைந்த நிலையிலேயேயாகும்.

வாழ்வில் அர்த்தத்தைத் தருவதும் ,மகிழ்ச்சியைத் தருவதும் ஆழமான அன்புறவிலேயாகும் என்று கூறினால் சாலப் பொருந்தும். காற்று இல்லாமல் ஒரு மனிதனால் வாழ முடியாது. காற்று மிகவும் முக்கியமானது. அதுபோலவே சந்தோசமான வாழ்வுக்கு நல்ல தொடர்பு, உறவு தேவையாகும். எம்மை அன்பு செய்ய, உரிமை பாராட்ட, வரவேற்புணர்வைத் தர மற்றவர்கள் இருக்கும்போது எமக்குள் மகிழ்ச்சி பொங்குகிறது.



சாதாரணமான வாழ்வில் உறவு தூரமாகும்போது, முறியும்போது கவலையும்; புதிதாக உறவு வளரும் போது, உறவு ஆழமாகும்போது மனதில் மகிழ்ச்சியும் ஏற்படுவது இயற்கை. ஆகவே விவாக வாழ்வில், குடும்ப வாழ்வில் ஆழமான அன்புத் தொடர்பை ஏற்படுத்த உள்ள திறமைகள் மிகவும் முக்கியமாகின்றன. ஆகவே குடும்ப வாழ்வில் உள்ளாகி இருப்போரும், உள்ளாக இருப்போரும் நல்ல உறவை ஏற்படுத்த அவசியமான திறமைகளைக் கொண்டிருக்க வேண்டும். நல்ல உறவை ஏற்படுத்தத் தெரிந்திருப்பது மட்டுமல்ல அதற்காக அர்ப்பணித்தவருமாக இருத்தல் வேண்டும்.

குடும்பத்தில் கணவன், மனைவி இருவருக்கிடையிலும் உள்ள தொடர்பு முதலில் முக்கியமானதாகும். இதேபோன்று பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலுள்ள தொடர்பு முக்கியமானதாகும். அதுமட்டுமன்று பிள்ளைகள் ஒருவர் ஒருவருக்கிடையிலுள்ள தொடர்பு முக்கியமானதாகும்.

கணவனுக்கும் மனைவிக்கும் ஏதாவது பிரச்சினையினால் இருவருக்குமிடையில் தொடர்பு முறிந்திருந்தால், பிள்ளைகளுக்கிடையிலும் நல்ல தொடர்பு இருக்க மாட்டாது. ஒரு குடும்பத்தில் தனது கணவன் அயல் வீட்டுக்குப் போவதை மனைவி விரும்பவில்லை என்பதைக் கணவன் அறிந்தும் அதைப் பொருட்படுத்தவில்லை. தனது கணவன் அடுத்த வீட்டுக்குப் போவதைத் தடை செய்ய மனைவி ஓர் உபாயத்தை தேடினாள். தனது கணவன் அடுத்த வீட்டுக்குச் சென்ற எல்லாச் சந்தர்ப்பத்திலும் தனது இளைய மகளுடன் சண்டை பிடித்து இளைய மகளை வேதனைப்படுத்தினாள். இளைய மகள் சத்தம் போட்டதைக் கேட்டதும் கணவன் உடனே வீட்டுக்கு வந்து விடுவார் என்பதை மனைவி அறிந்திருந்தாள். இவ்வாறு அடிக்கடி தண்டனை பெறும்போது தாயைப் பற்றி எப்படிப்பட்ட உணர்வு இளைய மகளுக்குள் ஏற்பட்டிருக்கும்? என்பதை உங்களால் சிந்திக்க முடியும். தாய்க்கும் மகளுக்கும் இடையிலான உறவு பலவீனமடைய, கணவன் மனைவிக்கிடையில் இருந்த உறவு பலவீனமடைந்ததே இங்கு காரணமாகும்.

உறவு,தொடர்பு என்பது இன்றைய நாளைவிட - நாளைய நாளில் வளர்த்துக் கொள்ளக்கூடிய ஒன்றாகும். கற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

ஒருநாள் தனது திருமண வாழ்வில் மனைவியோடு உறவை முறித்துக் கொண்ட கணவன் "நான் தற்போதுள்ள மனைவியை விலக்கி விட்டு, மற்றொரு பெண்ணை மணந்து கொண்டால் புதிதாக நல்ல உறவை ஏற்படுத்த பழகிக் கொள்ளலாம்" என்று நினைத்தானாம். இது பிழையான அபிப்பிராயமாகும். தற்போது இருக்கும் மனைவியுடன் நல்ல உறவை ஏற்படுத்தப் பழக வேண்டும்.

**எஸ்.ஜே.யோகராசா**

# போலிக் கையெழுத்தா?

## கண்டுபிடிக்கக் கருவி தயார்



போலிக் கையொப்பங்களைத் தடுப்பதற்காக பிரிட்டனின் மிகப்பெரிய கட்டட நிறுவனமான நேஷன்வைட் நிறுவனம் இலத்திரனியல் கையொப்பமுறை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம் பல மோசடிகளை தடுக்க முடியும் என அது கூறுகின்றது.

ஒருவர் கையொப்பம் இடும் வேகம் மற்றும் முறை என்பவற்றை இச்சாதனம் பதிவு செய்து வைக்கும். வேறு ஒருவர் இவரின் பெயரில் கையொப்பம் வைக்க முயன்றால் இச்சாதனம் முன்னைய கையொப்பத்துடன் இதை ஒப்பிட்டு இவரின் வேகம் மற்றும் முறையில் மாற்றமிருந்தால் கண்டுபிடித்துவிடும்.




பெருவிரலடையாள முறையைவிட இது சிறந்தது இல்லாவிடினும், இதன் மூலம் பெருமளவு பணம் மோசடி செய்யப்படுவதைத் தடுக்க முடியும் என நம்புகிறது நேஷன் வைட் நிறுவனம்.

வாடிக்கையாளர் ஒருவரை இலத்திரனியல் பலகை ஒன்றின் மீது கையொப்பமிடவைத்து அவரின் வேகம், எழுதும் முறை, அழுத்தும் விசை என்பவற்றை இதன் மூலம் பதிவு செய்து கொள்கின்றனர் இந் நிறுவனத்தினர்.

# தயாராகும் வீனஸ் எக்ஸ்பிரஸ்

வெள்ளிக்கிரகத்திற்கு தனது செயற்கைக் கோளை அனுப்பும் திட்டத்திற்கு ஐரோப்பிய விண்ணியல் நிறுவனம் (ESA) அனுமதியளித்துவிட்டது.

ஏறத்தாழ பூமியின் பருமனைக் கொண்டதாயினும் வெளளியின் காற்றுமண்டலம் மிகவும் தடிப்பானது. இதன வெப்பநிலையும் ஈயத்தை உருக்கிவிடக்கூடிய உயர் நிலையாகும். வெள்ளிக்கிரகத்துக்கு 'வீனஸ் எக்ஸ்பிரஸ்' எனும் இந்த செயற்கைக்கோள் 2005 ஆம் அண்டளவில் புறப்படலாம் எனத் தெரியவருகிறது. இதேசமயம் அடுத்த ஆண்டு செவ்வாய் கிரகத்திற்கான செயற்கைக்கோள் புறப்படத் தயாராகியுள்ளது.

ஆரம்பத்தில் இத்திட்டத்திற்கு உதவியளிக்க இத்தாலி மறுத்திருந்தபோதிலும் பின்னர் அதன் சம்மதம் கிடைத்துள்ளதாக ஐரோப்பிய விண்ணியல் நிறுவனம் கூறுகின்றது.



இது தான் 'வீனஸ் எக்ஸ்பிரஸ்'

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல். - திருக்குறள்

# நமது நோக்கு

## மக்களின் எதிர்பார்ப்பு !

அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது உட்பட படைத்தரப்பும்-விடுதலைப் புலிகளுக்கும் சம்பந்தப்படும் பாதுகாப்பு விவகாரங்ளைக் கையாள்வதற்காக- மாவட்டரீதியாக உபகுழுக்களை அமைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம்-ஒவ்வொரு மாவட்ட ரீதியிலும் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளை, அம் மாவட்ட படைத்தளபதிகளும், விடுதலைப்புலிகளின் தளபதிகளும், அரசியற்துறைப் பொறுப்பாளர்களும் நேரடியாகக் கலந்து பேசித்தீர்க்கவுள்ளனர்.

இவ்வாறு மாவட்ட ரீதியாக உபகுழுக்கள் அமைக்கப்படுவதன் வழியாக-அவ்வப்பகுதிகளுக்கேயுரிய களசூழல்களைக் கருத்திற் கொண்டு நடைமுறைச் சாத்தியமான நகர்வுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும் எனக் கருதமுடியும்.

அதேவேளை-மாவட்ட மட்டங்களில் ஏற்படுத்தப்படும் தொடர்புகளும், ஒருங்கிணைப்பும்-பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சாதகத்தை உருவாக்குவது மட்டுமன்றி, பிரச்சினைகள் தோன்றி, அவை தீவிரம் கொள்வதற்கான அல்லது முரண்பாட்டுச் சூழலுக்கான சந்தர்ப்பங்களையும் குறைத்துக் கொள்ள ஏதுவாகும்.

சகஜவாழ்க்கைக்குத் திரும்புவதில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும்-பாதுகாப்பு விவகாரங்களில் இருக்கும் தடைக்கற்களை படிப்படியாக அகற்றிக் கொள்ளவும் இந்த நேரடித் தொடர்பு வழிவகுக்கமுடியும்.

நேற்று முன்தினம் நடந்த சந்திப்பு, இருதரப்புப் படைத்துறையினரும் தொடர்ந்தும் பாதுகாப்புப் பிரச்சினைகளைப் பற்றிப் பேச-ஒரு நல்ல ஆரம்பமாக இருந்ததாக பேச்சுக்களுக்கு புலிகள் தரப்பில் தலைமை வகித்த கேணல் கருணா கூறியிருந்தமையை நோக்குமிடத்து-

இவ்வாறான தொடர்புகள்-புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் போர் நிறுத்த நடைமுறையையும் மேலும் உறுதியானதாக்கும் என்ற நம்பிக்கையை வலுவாக்கியிருக்கின்றது.

இருதரப்புக்களுக்கிடையிலுமான தொடர்பாடல் இடைவெளி குறைக்கப்படுவதற்கு சந்தர்ப்பமளித்திருப்பதன் வழியே-பாதுகாப்பு விவகாரங்களில் சுமுகமாக நகர்வுகளுக்கு இடமேற்படும் என்றும் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இந்த நம்பிக்கையை கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் இருதரப்பினருக்கும் இருக்கும் அதேவேளை-

இத்தகைய முயற்சிகளை பெறுமதியுடைய தாக்குவதற்காக-கட்டுப்பாடுகளையும் கெடுபிடிகளையும் மக்கள் மீது விதித்துள்ள படைத்தரப்பு-தனது பிடிவாதப் போக்குகளைத் தளர்த்துவது மிக அவசியமாகின்றது.

அவ்வாறான தளர்வுகள், மாற்றங்கள் மூலமே-மக்களின் சுமுக வாழ்வும், நடமாட்டமும் இலகுபடுத்தப்படவும் - அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளக்குடியமரவும் முடியும்.

அவ்வாறானதொரு கட்டத்திலேயே எதிர்பார்க்கப்படும் புனர்வாழ்வு - புனரமைப்பு பணிகளைத் தொடங்குவதும், தொடர்ந்து மேற்கொள்வதும் சாத்தியப்பாடானதாக அமையும்.

எனவே - இனி வரப்போகின்ற முன்னேற்றங்களுக்கு ஒரு ஆரம்ப நிலையமாக, பாதுகாப்பு விவகாரங்கள் அமையப் போவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து - அதனைச் செம்மையாக்குவதற்கு உபகுழுக்களின் பணி உதவ வேண்டும் என்பதும், இதற்கு படைத் தரப்பு தனது விசுவாசமான ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்பதும் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# யுத்தப் பாதிப்புக்கு உடன் நிவாரணம் அமெரிக்காவின் விருப்பம் அதுவே!

### வெளியுறவுப் பேச்சாளர் ஃப்ரெட்ரிக்கா ஜோன்ஸ் தெரிவிப்பு!

(வொஷிங்டன்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடியான நிவாரணத்தைத் தருவதிலும், அதற்கான திட்டங்களுக்கு உதவுவதிலும் அமெரிக்கா கருத்தாக இருப்பதாக - அமெரிக்க வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஃப்ரெட்ரிக்கா ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள, உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையிலேயே - அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறும்போது - நாட்டின் பிராந்திய ஒருமைப்பாட்டைக்காக்கும் வகையில், ஜனநாயக வழியிலும், மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் விதத்திலும் - நகரும் அமைதி முயற்சிகள் வழியாக - இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத்தீர்வு கிடைக்கும் எனத் தாம் நம்புவதாகவும் - அவர் குறிப்பிட்டார்.

### சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில்

# ஒவ்வொரு கணினி நிறுவனமும் 10 மாணவருக்கு இலவசப் பயிற்சி

தமிழீழ மாணவர் பேரவையினர் கணினிக் கற்கை நிறுவனங்களின் இயக்குநர்களுடன் நடாத்திய கலந்துரையாடலையடுத்து, ஒவ்வொரு கணினிக் கற்கை நிறுவனத்திலும் பத்து வறிய மாணவர்களுக்கு கணினி கற்கைநெறிகளைப் பயிற்றுவிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டிலுள்ள வறிய மாணவர்களும் கணினி பற்றிய அறிவைப் பெறவேண்டும்; கணினி கற்கை நெறிகளைக் கற்க வேண்டும்; இதற்கு கணினிக்கற்கை நிறுவனங்கள் முன்வரவேண்டும் என, தமிழீழ மாணவர் பேரவையினர் கணினிக் கற்கை நிறுவனங்களின் இயக்குநர்களிடம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே, யாழ்ப்பாணத்திலுள்ள கணினிக் கற்கை நிறுவனங்கள் ஒவ்வொன்றும் தமது நிறுவனத்தில் பத்து வறிய மாணவர்களுக்கு கணினிக் கற்கை நெறியை வழங்க சம்மதம் தெரிவித்துள்ளன.

இக்கற்கைநெறிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் வறிய மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் எனவும் கணினிக் கல்வியை கற்க வசதியில்லாத மாணவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளும்படியும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் கேட்டுள்ளனர். (க)(லி)

## எழுந்தருளி விக்கிரங்கள் நாவற்குழியில் திருட்டு

(கொக்குவில் மேற்கு)

நாவற்குழி சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தினுள் நுழைந்த திருடர்கள்- சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வள்ளி தெய்வானை எழுந்தருளி விக்கிரகங்களைக் திருடிச் சென்றுள்ளனர். (108)

# கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை உடனடியாகச் சாத்தியமில்லையாம் !

(கொழும்பு நிருபர்)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை உடனடியாக ஆரம்பிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை எனத் தெரியவருகின்றது.

இந்தக் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான உடன்பாட்டைச் செய்து கொள்வது தொடர்பான ஆவணங்கள் புதுடில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் புதுடில்லியில் உள்ள அதிகாரிகள் உடனடியாக இச்சேவையை ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்படுவதற்குச் சாத்தியமில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

தூத்துக்குடித் துறைமுகத்தினூடாக இதுவரை பயணிகள் கப்பல் சேவை இடம்பெறவில்லை. இது பண்ட சேவைத்துறைமுகமாகவே இருந்து வருகின்றது. இதனூடாக பயணிகள் போக்குவரத்து இடம்பெறுவதனால் பயணிகளுக்கான வசதிகள், மற்றும் குடிவரவு-குடியகல்வு அலுவலகம் இவற்றுக்கான கட்டிட வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

இதன் பின்னரே தூத்துக்குடி- கொழும்பு கப்பல் சேவையை ஆரம்பிக்க முடியும் எனவும், இது தொடர்பாக இரு நாட்டு அரசாங்கங்களுக்கும் இடையில் இதுவரை எந்த உடன்பாடும் செய்து கொள்ளப்படவில்லை என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கொழும்புத் துறைமுகத்திலும் பயணிகள் போக்குவரத்துக்குரிய வசதிகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

### பல்கலைக்கழக நிலைமைகள் தொடர்பாக ஆராய

## அனைத்து துணைவேந்தர்களும் அவசர கூட்டத்துக்கு அழைப்பு

(கொழும்பு நிருபர்)

பல்கலைக்கழகங்களில் ஏற்படும் மோதல்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக அனைதது பல்கலைக்கழகத் துணைவேந்தர்களுககான அவசரக கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மாணவர் குழுக்களிடையே ஏற்பட்ட குழு மோதல்களில் மாணவர் ஒருவர் உயிரிழந்ததையடுத்தே தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காக மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர்காசிம இக் கூட்டத்துக்கு ஏற்பாடுகள் செய்துள்ளார்.

# இரு வாரங்களுக்கொருமுறை இனி நிவாரண விநியோகம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மாதாந்த உலர் உணவு நிவாரண விநியோகம் இனி வரும் காலங்களில் இருவாரங்களுக்கு ஒரு தடவைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

நான்கு வாரங்களுக்குமான உலருணவுப் பொருட்களை மாதத்தில் ஒரு தடைவையிலேயே தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு ஒரே தடவையாக அதிக அளவு உணவுப் பொருட்களை மக்களிடம் வழங்குவதால் அவை துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு அதிகசந்தர்ப்பம் உருவாகிவிடும். இவ்வாறான துஷ்பிரயேகத்தைத் தடுப்பதற்காகவே மேற்படி மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒவ்வொரு குடும்பத்திற்குமுரிய ஒரு மாதத்திற்கான உலருணவுப் பொருட்கள் இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு இரண்டு வாரத்திற்கு ஒரு தடவை விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் யாழ்.செயலகம் மேற்கொண்டு வருகின்றது. (க,லி)

## நெடுந்தீவு கானாமுனைப் பகுதியில் ஆணின் சடலம் கரையொதிங்கியது!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கானாமுனைப் பகுதியில் இனந்தெரியாத ஆணின் சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

சுமார் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்கவரின் சடலமே கரையொதுங்கியுள்ளது. வெள்ளை நிறத்தில் நீலக்கோடு போட்ட அரைக் காற்சட்டை அணிந்துள்ள இவரது சடலத்தை பொலிஸார் பொறுப்பேற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் எதிர்பார்த்திராத உதவிகள்!

### புதுமையான நிலை என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் பின்னர்-வெளிநாடுகளிலிருந்து எதிர்பாராத வகையில் ஏராளமான உதவிகள் கிடைக்கத் தொடங்கியிருப்பதாகவும், இது புதுமையானதென்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தாய்லாந்துப் பேச்சுக்கள் - அனைத்து எதிர்பார்ப்புக்களையும் மீறி வெற்றிகரமாக நடைபெற்றதாகக் குறிப்பிட்ட அவர் -

வெளிநாட்டு அரசாங்கங்கள் புதிய நிலையை நம்பிக்கையுடன் நோக்கத் தொடங்கியிருப்பதாகவும் கூறியுள்ளார்.

# தமிழீழ மீட்புநிதி கடன் மீளல் - 2002

**நேற்றைய தொடர்ச்சி....**

| | |
|---|---|
| 060. யா/ந/1133 | திரு.நாகரத்தினம் பாலசிங்கம் |
| 061. யா/ந/1227 | திரு.இராமு சின்னராசா |
| 062. யா/ந/1240 | திருமதி சரஸ்வதி ஞானகோபாலன் |
| 063. யா/ந/1281 | திரு.வைத்திலிங்கம் திருச்செல்வம் |
| 064. யா/ந/1299 | திருமதி வசந்தா திருஞானசம்பந்தர் |
| 065. யா/ந/1313 | திரு.சின்னத்துரை குகமூர்த்தி |
| 066. யா/ந/1382 | திரு.தம்பையா நாகலிங்கம் |
| 067. யா/ந/1421 | திரு.பொன்னுத்துரை சண்முகநாதன் |
| 068. யா/ந/1448 | திரு.விஸ்வலிங்கம் கணேசன் |
| 069. யா/ந/1488 | திரு.சின்னையா விஸ்வநாதன் |
| 070. யா/ந/1514 | திரு.தியாகராசா மார்க்கண்டு |
| 071. யா/ந/1555 | திரு.வீரசிங்கம் யோகரத்தினம் |
| 072. யா/ந/1564 | திரு.இரத்தினம் அருளானந்தம் |
| 073. யா/ந/1593 | திரு.இரத்தினசபாபதி கமலநாதன் |
| 074. யா/ந/1643 | திருமதி பொன்னம்மா இராசையா |
| 075. யா/ந/1647 | திரு.வைத்தியலிங்கம் சிவசம்பு பத்மநாதன் |
| 076. யா/ந/1789 | திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு |
| 077. யா/ந/1832 | திரு.இராஜரட்ணம் தயாநிதி |
| 078. யா/ந/1867 | திருமதி இந்திராதேவி கனகசபை |
| 079. யா/ந/1948 | திரு.சுப்பையா நவரத்தினம் |
| 080. யா/ந/2120 | திரு.கணபதிப்பிள்ளை சின்னையா ஆறுமுகம் |
| 081. யா/ந/2180 | திரு.சின்னையா கனகசபை |
| 082. யா/ந/2275 | திரு.சுப்பிரமணியம் இராமநாதபிள்ளை |
| 083. யா/ந/2315 | திரு.நடராசா சற்குணலிங்கம் |
| 084. யா/ந/2379 | திருமதி சிவபாக்கியம் இராசநாயகம் |
| 085. யா/ந/2397 | திரு.குமாரசாமி யோகேந்திரா |
| 086. யா/ந/2409 | செல்வி.கதிர்காமதேவி சுப்பிரமணியம் |
| 087. யா/ந/2469 | திரு.குமாரசாமி பாலசிங்கம் |
| 088. யா/ந/2584 | திருமதி சிவகுமாரி ஜெகதீசன் |
| 089. யா/ந/2594 | திருமதி கமலாதேவி சோமசுந்தரம் |
| 090. யா/ந/2674 | திரு.விசுவலிங்கம் இரத்தினசபாபதி |
| 091. யா/ந/2712 | திருமதி சாந்தகுமாரி சுந்தரானந்தா |
| 092. யா/ந/2824 | திரு.இரத்தினம் கமலதாஸ் |
| 093. யா/ந/2844 | திருமதி லோகராணி கிஸ்ணதாஸ் |
| 094. யா/ந/2873 | திரு.செல்லையா நடராசா |
| 095. யா/ந/3055 | திரு.ஆறுமுகம் அமிர்தாயானசிவம் |
| 096. யா/ந/3111 | திருமதி கனகம்மா சோமசுந்தரம் |
| 097. யா/ந/3119 | திரு.செல்லத்துரை கோபாலகிருஷ்ணன் |
| 098. யா/ந/3133 | திருமதி மகேந்திராணி இராஜரட்ணம் |
| 099. யா/ந/3136 | திருமதி மனோன்மணி சபாரத்தினம் |
| 100. யா/ந/3164 | திருமதி நல்லம்மா சுப்பிரமணியம் |
| 101. யா/ந/3203 | திரு.சின்னையா பத்மநாதன் |
| 102. யா/ந/3210 | திருமதி இரத்தினேஸ்வரி ரகுநாதன் |
| 103. யா/ந/3217 | திருமதி இராஜலட்சுமி ஆறுமுகம் |
| 104. யா/ந/3220 | திரு.செல்லத்துரை இரத்தினகுமார் |
| 105. யா/ந/3287 | செல்வி.சுதர்ஷினி இரத்தினசிங்கம் |
| 106. யா/ந/3299 | திருமதி விமலாதேவி சிவசுப்பிரமணியம் |
| 107. யா/ந/3348 | திரு.சின்னக்குட்டி தேவராஜா |
| 108. யா/ந/3400 | திரு.நாகமுத்து நமச்சிவாயஇடைக்காடர் |
| 109. யா/ந/3408 | திருமதி ரஞ்சினிதேவி ஜெயந்திரன் |
| 110. யா/ந/3427 | திரு.சோமசுந்தரம் சரவணபவான் |
| 111. யா/ந/3445 | திருமதி கமலராணி பூபாலராஜா |
| 112. யா/ந/3464 | திரு.மாணிக்கம் இராசலிங்கம் |
| 113. யா/ந/3480 | திரு.நன்னித்தம்பி இரத்தினசிங்கம் |
| 114. யா/ந/3481 | திரு.வல்லிபுரம் நடராசா |
| 115. யா/ந/3483 | திருமதி கமலாதேவி புவனசுந்தரராஜா |
| 116. யா/ந/3514 | திரு.தாமோதரம்பிள்ளை திருநாவுக்கரசு |
| 117. யா/ந/3569 | திருமதி அனற்வசந்தநிதி பிறின்ஸ் சந்திரகுமார்பெஞ்சமின் |
| 118. யா/ந/3573 | திருமதி கலாராணி ஸ்ரீஸ்கந்தராசா |
| 119. யா/ந/3660 | திரு.கந்தையா சுப்பிரமணியம் |
| 120. யா/ந/3677 | திரு.இராமலிங்கம் அரசலிங்கம் |
| 121. யா/ந/3755 | திருமதி ஜானகி பஞ்சாட்சரன் |
| 122. யா/ந/3764 | திரு.பொன்னம்பலம் இராசநாயகம் |
| 123. யா/ந/3797 | திரு.வினாயகமூர்த்தி இராஜரட்ணம் |
| 124. யா/ந/3798 | திரு.இராசையா பாலசிங்கம் |
| 125. யா/ந/3815 | திருமதி சொர்ணபாக்கியம் சபாரத்தினம் |
| 126. யா/ந/3828 | திரு.அம்பலவாணர் கந்தையா |
| 127. யா/ந/3835 | திருமதி கௌசலாதேவி சந்திரசேகரம் |
| 128. யா/ந/3862 | திரு.சின்னத்துரை பூபாலசிங்கம் |
| 129. யா/ந/3869 | செல்வி.உமாமகேஸ்வரி வேலாயுதம் |
| 130. யா/ந/3886 | திரு.கந்தையா சோமசுந்தரம் |
| 131. யா/ந/3957 | திரு.தம்பு சுரேந்திரன் |
| 132. யா/ந/4018 | திருமதி ஜெயலட்சுமி சண்முகநாதன் |
| 133. யா/ந/4071 | செல்வி.றஞ்சினிதேவி சுந்தரம் |
| 134. யா/ந/4101 | செல்வி.சசீகலா பரமலிங்கம் |
| 135. யா/ந/4110 | திருமதி பத்மாதேவி கந்தமூர்த்தி |
| 136. யா/ந/4145 | திருமதி தங்கமலர் மயில்வாகனம் |
| 137. யா/ந/4190 | திருமதி விஜயலட்சுமி செல்வராஜா |
| 138. யா/ந/4200 | செல்வி.அனுஜா சோதிராஜா |
| 139. யா/ந/4209 | திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு |
| 140. யா/ந/4280 | திருமதி செல்லம்மா வேலாயுதம் |
| 141. யா/ந/4323 | திரு.வைத்திலிங்கம் வீரசெல்லையா |
| 142. யா/ந/4325 | திரு.முத்துக்குமாரசாமி இராஜேந்திரன் |
| 143. யா/ந/4365 | திரு.அருணகிரிநாதன் மணிவண்ணன் |
| 144. யா/ந/4381 | திருமதி புவனம் செல்வநாயகம் |
| 145. யா/ந/4507 | திருமதி ரதி சந்திரநாதன் |
| 146. யா/ந/4548 | திரு.முருகேசு ஐயாத்துரை |
| 147. யா/ந/4551 | திருமதி சிவயோகம் சோமசுந்தரம் |
| 148. யா/ந/4558 | திரு.குணரத்தினம் கணேசலிங்கம் |
| 149. யா/ந/4581 | திருமதி நிர்மலா பாலசுந்தரம் |
| 150. யா/ந/4587 | திருமதி தவயோகசிந்தாமணி தியாகராஜா |
| 151. யா/ந/4605 | திருமதி பாலேஸ்வரி கனகசபாபதி |
| 152. யா/ந/4625 | திரு.நாகரெட்ணம் பத்மநாதன் |
| 153. யா/ந/4652 | திரு.நரசிங்கம் சிவன் |
| 154. யா/ந/4725 | திருமதி இராசமலர் கனகரட்ணம் |
| 155. யா/ந/4745 | செல்வி.தியாகினி தியாகராஜா |
| 156. யா/ந/4795 | திருமதி மகாலட்சுமி வசந்தகுமார் |
| 157. யா/ந/4849 | செல்வி.நித்தியபாக்கியம் கோவிந்தபிள்ளை |
| 158. யா/ந/4851 | திரு.முத்துத்தம்பி சபாநாதன் |
| 159. யா/ந/4874 | செல்வி.அனுசா குணரட்ணம் |
| 160. யா/ந/4956 | செல்வி.ஜெகசீதா இரத்தினம் |
| 161. யா/ந/5010 | திரு.திருஞானசம்பந்தன் நாகலிங்கம் |
| 162. யா/ந/5034 | திரு.முருகேசு சண்முகநாதன் |
| 163. யா/ந/5055 | திருமதி பத்மாவதி செல்வநாயகம் |
| 164. யா/ந/5122 | திருமதி இந்திராணி செல்வரத்தினம் |
| 165. யா/ந/5162 | திரு.சுந்தரம் சுந்தரலிங்கம் |
| 166. யா/ந/5178 | திரு.பொன்னர் தம்பிஜயா |
| 167. யா/ந/5198 | திரு.இராசரெட்ணம் மோகனராசா |
| 168. யா/ந/5199 | திரு.சரவணமுத்து சண்முகநாதன் |
| 169. யா/ந/5244 | செல்வி.கிருபா இராமநாதன் |
| 170. யா/ந/5302 | திருமதி கனகேஸ்வரி பாலசுப்பிரமணியம் |
| 171. யா/ந/5319 | திரு.நடராசா இராசலிங்கம் |
| 172. யா/ந/5331 | திரு.இளையதம்பி சந்திரன் |
| 173. யா/ந/5334 | திரு.கணபதிப்பிள்ளை சிவகுமரன் |
| 174. யா/ந/5428 | திரு.கந்தையா சிவசம்பு |
| 175. யா/ந/5429 | திரு.கனகரத்தினம் சந்திரரத்தினம் |
| 176. யா/ந/5468 | திரு.தியாகராசா நவநீதன் |
| 177. யா/ந/5484 | திரு.செல்லத்துரை விவேகானந்தா |
| 178. யா/ந/5515 | செல்வி.சாந்தா சரவணமுத்து |
| 179. யா/ந/5536 | திருமதி தேவிகாராணி வீரசிங்கம் |
| 180. யா/ந/5569 | திருமதி கருணாதேவி கோபால் |
| 181. யா/ந/5600 | திருமதி செல்வராணி மகாலிங்கம் |
| 182. யா/ந/5605 | திருமதி அருளாம்பிகை பத்மசிறீறெங்கன் |
| 183. யா/ந/5646 | திருமதி கமலாவதி செல்வரத்தினம் |
| 184. யா/ந/5649 | திரு.சிவசம்பு கணேசன் |
| 185. யா/ந/5700 | திரு.முருகேசு சுந்தரலிங்கம் |
| 186. யா/ந/5731 | திரு.கணபதிப்பிள்ளை யோகேந்திரன் |
| 187. யா/ந/5751 | திருமதி ராஜேஸ்வரி சிறீஸ்காந்தன் |
| 188. யா/ந/5753 | செல்வி.வசந்தகுமாரி தம்பையா |
| 189. யா/ந/5765 | திருமதி சறோஜினிதேவி பன்னீர்ச்செல்வம் |
| 190. யா/ந/5814 | திரு.வேலுப்பிள்ளை மகேஸ்வரன் |
| 191. யா/ந/5877 | திருமதி நல்லபிள்ளை சரவணமுத்து |
| 192. யா/ந/5951 | திருமதி யோகம்மா கந்தையா |
| 193. யா/ந/5960 | திரு.மாணிக்கம் ஐயன்னா |

**வெளியகல்வு**

| | |
|---|---|
| 001. யா/வெ/2 | திருமதி அன்னம்மா செபஸ்தியாம்பிள்ளை |
| 002. யா/வெ/4 | திருமதி புஸ்பராணி ஸ்ரீகுணநாதன் |
| 003. யா/வெ/6 | திரு.முருகேசபிள்ளை சந்திரகுமார் |
| 004. யா/வெ/7 | திரு.விசுவலிங்கம் பிரபாகரன் |
| 005. யா/வெ/8 | திரு.சுவாமிநாதன் பாலேந்திரா |
| 006. யா/வெ/9 | திருமதி கமலாசினி ஸ்கந்தராசா |
| 007. யா/வெ/15 | திருமதி சுதந்திரா செல்வலிங்கம் |
| 008. யா/வெ/16 | திரு.சுப்பிரமணியம் யோகரத்தினம் |
| 009. யா/வெ/17 | திருமதி மேரிமாக்கிரட் சுவாம்பிள்ளை |
| 010. யா/வெ/18 | திரு.நாகலிங்கம் இரத்தினம் |
| 011. யா/வெ/19 | திருமதி சூசன் சுகிர்தம் சில்வஸ்ரர் |
| 012. யா/வெ/20 | திருமதி மரியா இனசன்ரீனா மரியாம்பிள்ளை |
| 013. யா/வெ/21 | திருமதி கமலாதேவி கோபலரத்தினம் |
| 014. யா/வெ/23 | திருமதி சிவபாக்கியயோகேஸ்வரி இராசலிங்கம் |
| 015. யா/வெ/24 | திரு.திருநாவுக்கரசு சிறிதரன் |
| 016. யா/வெ/27 | திருமதி மங்கையற்கரசி இரட்ணசிங்கம் |
| 017. யா/வெ/28 | திருமதி ஜெயபதி தயாபரன் |
| 018. யா/வெ/29 | செல்வி.யசிந்திரா துரைசிங்கம் |
| 019. யா/வெ/30 | திரு.பொன்னம்பலம் சொர்ணலிங்கம் |
| 020. யா/வெ/32 | திரு.நாகலிங்கம் தனபாலசிங்கம் |
| 021. யா/வெ/34 | திருமதி இராஜலக்சுமி விஜயசூரியர் |
| 022. யா/வெ/38 | திரு.வேலுப்பிள்ளை ஆனந்தராசா |
| 023. யா/வெ/41 | திருமதி சுமேந்திரா கணேசமூர்த்தி |
| 024. யா/வெ/42 | திருமதி ஆனந்தி ஜெயதீசன் |
| 025. யா/வெ/45 | செல்வி.அருள்விழி அருளலிங்கம் |
| 026. யா/வெ/47 | திருமதி ரூபினி பாலச்சந்திரா |
| 027. யா/வெ/50 | திரு.பாலசிங்கம் கிரிகாலன் |
| 028. யா/வெ/52 | செல்வி.காவேரி கந்தையா |
| 029. யா/வெ/53 | திரு.இராமலிங்கம் மார்க்கண்டு |
| 030. யா/வெ/54 | செல்வி.தேவராணி வைத்திலிங்கம் |
| 031. யா/வெ/55 | திரு.வைத்திலிங்கம் இரகுநாதமுதலியார் |
| 032. யா/வெ/59 | திருமதி பத்மலோசனா இரவீந்திரன் |
| 033. யா/வெ/61 | திருமதி சகுந்தலாதேவி சச்சிதானந்தசிவம் |
| 034. யா/வெ/63 | செல்வி.மங்களேஸ்வரி இராமதாஸ் |
| 035. யா/வெ/64 | திருமதி சுமதி செல்வகுமார் |
| 036. யா/வெ/65 | திரு.கணபதிப்பிள்ளை விக்கினராசா |
| 037. யா/வெ/69 | திரு.அருளானந்தசிவம் சூரசங்காரசிவம் |
| 038. யா/வெ/70 | திருமதி விஜியரூபி மகேந்திரன் |
| 039. யா/வெ/71 | திருமதி புவனேஸ்வரி ஞானலிங்கம் |
| 040. யா/வெ/73 | திருமதி வடிவாம்பிகை கணேசன் |
| 041. யா/வெ/75 | திருமதி யோன்ஓவ்ஆர்த் ஞானப்பிரகாசம் |
| 042. யா/வெ/78 | திரு.பொன்னையா முருகேசப்பிள்ளை |
| 043. யா/வெ/79 | திரு.தம்பிப்பிள்ளை வரதராஜா |
| 044. யா/வெ/86 | திருமதி தமயந்தி சந்திரபாலன் |
| 045. யா/வெ/92 | திரு.சண்முகம் பூபாலசிங்கம் |
| 046. யா/வெ/95 | திரு.வயிரகப்பிள்ளை பாலசுப்பிரமணியம் |
| 047. யா/வெ/96 | திருமதி பரமேஸ்வரி சிவபாதம் |
| 048. யா/வெ/100 | திருமதி முத்துமலா விஜயரத்தினம் |
| 049. யா/வெ/104 | திருமதி கலைஞானபுவனபதி சாம்பசிவம் |
| 050. யா/வெ/108 | திரு.ஜேம்ஸ் பிலிப்ஸ் |
| 051. யா/வெ/109 | திரு.மயில்வாகனம் சுந்தரலிங்கம் |
| 052. யா/வெ/110 | திருமதி ஷாந்தினி தனபாலசூரியர் |
| 053. யா/வெ/111 | திருமதி சாந்தினி கணேசசுந்தரம் |
| 054 யா/வெ/113 | திருமதி தருமராணி சிற்சபேசன் |
| 055. யா/வெ/114 | திருமதி வனிதாமணி செல்வராசா |
| 056. யா/வெ/117 | திரு.அப்புத்துரை நித்தியானந்தன் |
| 057. யா/வெ/121 | திருமதி வசந்திராதேவி பரிமேலழகனார் |
| 058. யா/வெ/124 | திருமதி எவெரெஸ்ரா தோமஸ்அன்ரனி |
| 059. யா/வெ/126 | திரு.சோமசுந்தரம் கணேசமூர்த்தி |
| 060. யா/வெ/133 | திரு.ஜீவராஜா அஜித்நியூட்டன் |
| 061. யா/வெ/134 | திரு.சிமியோன் மரியதாசன் |
| 062. யா/வெ/138 | திரு.கந்தையா மார்க்கண்டு |
| 063. யா/வெ/141 | திருமதி சின்னம்மா றேமன் |
| 064. யா/வெ/142 | திரு.காசிநாதர் சோமசுந்தரம் |
| 065. யா/வெ/143 | திரு.அம்பலவாணர் பவளத்துரை |
| 066. யா/வெ/145 | திரு.சின்னத்தம்பி கணேசன் |
| 067. யா/வெ/147 | திருமதி ஞானாம்பிகை பத்மசிகாமணி |
| 068. யா/வெ/148 | திரு.தெய்வேந்திரன் ரவீந்திரன் |
| 069. யா/வெ/150 | திருமதி கருணைநாயகி சீவரத்தினம் |
| 070. யா/வெ/152 | திருமதி மங்கையற்கரசி செல்லத்துரை |
| 071. யா/வெ/155 | செல்வி.ஜனனி இராமநாதன் |
| 072. யா/வெ/162 | செல்வி.கம்சா இரத்தினநாயகம் |
| 073. யா/வெ/174 | திருமதி சுவேந்தினி செல்வநாயகம் |
| 074. யா/வெ/176 | திரு.சுப்பரமணியம் இரத்தினம் |
| 075. யா/வெ/177 | திருமதி கெங்காராணி பாலகிருஷ்ணன் |
| 076. யா/வெ/178 | திரு.பத்மநாதன் நடனசிவன் |
| 077. யா/வெ/179 | திருமதி ஸ்ரீரஜனி பமானந்தம் |
| 078. யா/வெ/185 | திருமதி சோதிராணி கலாநிதி |
| 079. யா/வெ/189 | திருமதி சிறிரஞ்சனி குமாரகுலசிங்கம் |
| 080. யா/வெ/197 | திரு.கந்தசாமி பலராமன் |
| 081. யா/வெ/201 | செல்வி.சாந்தமதி சந்தனம் |
| 082. யா/வெ/202 | திரு.விஸ்வலிங்கம் பஞ்சலிங்கம் |
| 083. யா/வெ/207 | திருமதி ரேவதி ஸ்ரீரங்கன் |
| 084. யா/வெ/208 | திரு.நவரத்தினம் சுந்தரலிங்கம் |
| 085. யா/வெ/212 | திரு.தம்பு சண்முகராசா |
| 086. யா/வெ/213 | திருமதி ஜெயராணி இராமலிங்கம் |
| 087. யா/வெ/214 | திருமதி பாலசவுந்தரி சின்னத்தம்பி |
| 088. யா/வெ/216 | திருமதி மேரியூபிறேசியா பீற்றர் அலோசியஸ் |
| 089. யா/வெ/219 | திரு.தருமலிங்கம் பாலசுப்பிரமணியம் |
| 090. யா/வெ/221 | திருமதி பிறேமளா பாலசுப்பிரமணியம் |
| 091. யா/வெ/230 | திரு.சிவகுருநாதன் முருகேசன் |
| 092. யா/வெ/232 | திருமதி கலைமகள் குமாரலிங்கம் |
| 093. யா/வெ/233 | திருமதி மேரிராணி இமானுவேல் |
| 094. யா/வெ/234 | திரு.பொன்னம்பலம் முத்துக்குமாரு |
| 095. யா/வெ/236 | திருமதி புவனேஸ்வரி கனகசபை |
| 096. யா/வெ/237 | திருமதி யோகாதேவி மனோகரன் |
| 097. யா/வெ/239 | திரு.கணேஸ் வைத்தீஸ்வரன் |
| 098. யா/வெ/243 | திரு.பெருமாள்பிள்ளை சேதுராமன் |
| 099. யா/வெ/246 | திரு.சின்னையா ரவிச்சந்திரன் |
| 100. யா/வெ/248 | திரு.செல்லையா மகாதேவா |
| 101. யா/வெ/250 | திரு.காசிநாதர் இராஜேந்திரன் |
| 102. யா/வெ/252 | திரு.சுப்பிரமணியம் கதிரவேல் |
| 103. யா/வெ/253 | திரு.மங்களம் இராஜன் |
| 104. யா/வெ/254 | திருமதி நேவிஸ் றோசாறி |
| 105. யா/வெ/255 | திருமதி ஆரோக்கியசீலி கோமஸ் |
| 106. யா/வெ/257 | திருமதி சுபத்திரா குணபாலசிங்கம் |
| 107. யா/வெ/260 | திரு.சிவசம்பு தங்கராஜா |
| 108. யா/வெ/262 | செல்வி.நிர்மலா சின்னத்துரை |
| 109. யா/வெ/266 | திரு.ஆறுமுகம் சிவராசா |
| 110. யா/வெ/271 | திரு.விசுவநாதர் ஸ்ரீஸ்காந்தா |
| 111. யா/வெ/275 | திருமதி வனிதாமணி கோபாலநாதன் |
| 112. யா/வெ/277 | திரு.சுப்பையா தனபாலசிங்கம் |
| 113. யா/வெ/280 | திரு.பிராமநாயகம் சந்தணமுத்துச்சாமி |
| 114. யா/வெ/283 | திரு.சுப்பிரமணியம் சிங்காரவேல் |
| 115. யா/வெ/285 | திரு.வேலுப்பிள்ளை பிறேம்குமார் |
| 116. யா/வெ/289 | திருமதி சந்திரிகா அருட்செல்வம் |
| 117. யா/வெ/290 | திருமதி பிறேமலதா உதயகுமாரநாதன் |
| 118. யா/வெ/297 | திருமதி கனகம்மா மழவராயமுதலி |
| 119. யா/வெ/302 | திரு.மரியதாஸ் டோனிகேட்டிஸ் |
| 120. யா/வெ/305 | திரு.சந்தாம்பிள்ளை மேஜர் அன்ரன் |
| 121. யா/வெ/306 | திருமதி ஜெகசொரூபி தர்மலிங்கம் |
| 122. யா/வெ/314 | திரு.வல்லி கனகன் |
| 123. யா/வெ/321 | திருமதி இராஜேஸ்வரி நவரட்ணம் |
| 124. யா/வெ/322 | திருமதி திரேசா இம்மானுவேல் |
| 125. யா/வெ/329 | திருமதி சீதா விஜயராஜா |
| 126. யா/வெ/331 | திரு.சின்னத்துரை ஜெயமனோகரன் |
| 127. யா/வெ/332 | திருமதி பராசக்தி செல்வநாயகம் |
| 128. யா/வெ/335 | திரு.கனகராசா சீனிவாசகம் |
| 129. யா/வெ/336 | திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் |
| 130. யா/வெ/345 | திரு.சின்னராமன் செட்டியார் சுப்பிரமணியம் |
| 131. யா/வெ/347 | திருமதி இராசம்மா கணேசன் |
| 132. யா/வெ/348 | திருமதி வினாயகபாக்கியம் சண்முகதாசன் |
| 133. யா/வெ/354 | திரு.செல்லையா கைலைநாதன் |
| 134. யா/வெ/355 | செல்வி.மேரிஇமெல்டா அந்தோனிப்பிள்ளை |
| 135. யா/வெ/366 | திருமதி கலாநாயகி பாலகிருஸ்ணன் |
| 136. யா/வெ/370 | திரு.மார்க்கண்டு ரவிசங்கர் |
| 137. யா/வெ/371 | திரு.குமாரகுருசிங்கம் நிதர்சன் |
| 138. யா/வெ/377 | திரு.சிவக்கொழுந்து நடராசா |
| 139. யா/வெ/378 | திரு.தேவ அருள்ராஜா றோயிஸ் மைக்மிலன் |
| 140. யா/வெ/383 | திரு.நாராயணசாமி சந்திரசேகரன் |
| 141. யா/வெ/387 | திரு.கந்தையா நடராஜா |
| 142. யா/வெ/390 | செல்வி.வசந்தகுமாரி ஏகாம்பரம் |
| 143. யா/வெ/392 | திரு.தம்பிப்பிள்ளை ஞானசேந்தன் |
| 144. யா/வெ/393 | திரு.வினாசித்தம்பி ஜெயராசா |
| 145. யா/வெ/394 | திருமதி முத்துமாரி துரைராசா |
| 146. யா/வெ/396 | திரு.சதாசிவம் அற்புததேவராஜா |
| 147. யா/வெ/403 | திரு.முத்துக்குமாரு வினாயகசேகரம் |
| 148. யா/வெ/411 | திரு.சுப்பிரமணியம் நித்தியானந்தன் |
| 149. யா/வெ/414 | திரு.நடராசா பாலேந்திரா |
| 150. யா/வெ/419 | திருமதி இந்திராணி சுந்தரலிங்கம் |
| 151. யா/வெ/420 | திருமதி பவளம் மனோகரன் |
| 152. யா/வெ/422 | திரு.செல்லத்துரை தாமோதரநாதன் |
| 153. யா/வெ/425 | திரு.பாக்கியநாதர் கிறிஸ்ரியோசப் |
| 154. யா/வெ/430 | செல்வி.கிருபா டேவிட் நடராசா |
| 155. யா/வெ/436 | திருமதி ராகினி துரையப்பா |
| 156. யா/வெ/438 | திருமதி மரியறோஸ் மரியதாஸ் |
| 157. யா/வெ/441 | திருமதி சிவனேஸ்வரி மரியாபரணம் |
| 158. யா/வெ/442 | திரு.மரியாம்பிள்ளை அன்ரன் அருளேஸ்வரன் |
| 159. யா/வெ/447 | திரு.சிவராசா சித்திராங்கதன் |
| 160. யா/வெ/454 | செல்வி.தர்சினி சிவலோகசுந்தரம் |
| 161. யா/வெ/459 | திருமதி நகுலாம்பிகை செல்வக்குமாரன் |
| 162. யா/வே/460 | திரு.விஜியதர்மா குமரேஸ்வரதாஸ் |
| 163. யா/வெ/463 | திருமதி தையல்நாயகி இராமநாதன் |
| 164. யா/வெ/466 | திரு.சின்னத்துரை கோகுலதாசன் |
| 165. யா/வெ/467 | திரு.இரத்தினம் கணேசலிங்கம் |
| 166. யா/வெ/470 | செல்வி.நில்ாநிதி சிவகடாட்சம் |
| 167. யா/வெ/471 | திரு.சுப்பிரமணியம் சந்திரன் |
| 168. யா/வெ/472 | திருமதி தங்கம்மா சிவலிங்கம் |
| 169. யா/வெ/473 | திரு.சுப்பிரமணியம் சண்முகநாதன் |
| 170. யா/வெ/476 | திருமதி மொறின் வரதன் |
| 171. யா/வெ/477 | திருமதி சற்குணலீலா கிரிதரன் |
| 172. யா/வெ/480 | திரு.மாணிக்கவாசகம் தங்கவேலு |
| 173. யா/வெ/483 | திருமதி ருக்மணி உதயகுமார் |
| 174. யா/வெ/484 | திரு.பசுபதிப்பிள்ளை அரசரத்தினம் |
| 175. யா/வெ/488 | திரு.நமசிவாயம் வாசஸ்பதி |
| 176. யா/வெ/489 | திரு.தங்கவடிவேல் மகேந்திரன் |
| 177. யா/வெ/490 | திரு.சண்முகம் பத்மநாதன் |
| 178. யா/வெ/493 | திரு.முருகேசு தவராஜா |
| 179. யா/வெ/499 | திருமதி இராஜேஸ்வரி ஆசீர்வாதம் |
| 180. யா/வெ/501 | திரு.குமாரசாமி சிவசுப்பிரமணியம் |
| 181. யா/வெ/502 | திரு.சண்முகநாதன் யோகநாதன் |
| 182. யா/வெ/504 | திரு.விசுவலிங்கம் சிவச்செல்வன் |

(நாளை தொடரும்.....)

# கடலில் வீழ்ந்து மூழ்கியது விமானம்; பிலிப்பைன்ஸில் 14 பேர் பரிதாப மரணம்!

## விமானத்தளத்திலிருந்து புறப்பட்ட சிறிதுநேரத்துள் சம்பவம்


மணிலா வளைகுடாவில் மீட்புப்பணியாளர்கள்

(மணிலா)

பிலிப்பைன்ஸின் வடபகுதி நகரான லாவோக்கிற்கு, தலைநகர் மணிலாவிலிருந்து 34 பயணிகளுடன் புறப்பட்ட விமானமொன்று கடலில் வீழ்ந்து மூழ்கியது. இதில் பயணம் செய்த 14 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்திற்குள்ளேயே - அருகிலுள்ள மணிலா குடாக்கடலில் இந்த விமானம் வீழ்ந்தது.

இதன் போது விமானத்திலிருந்த 16 பேர் மட்டுமே மீட்புப் பணியாளர்களால் காப்பாற்றப்பட்டதாக தெரியவருகின்றது.

இவ்விமான விபத்துக்கு இயந்திரக் கோளாறே காரணமென விமானத்தின் பைலட் கட்டுப்பாட்டு அறைக்கு இறுதியாக அறிவித்திருந்தார்.

விமானத்தை மீண்டும் புறப்பட்ட விமானத்தளத்திற்கே திருப்பிய போது - விமான ஓடுபாதைக்கு ஒரு கிலோமீற்றர் இருக்கும்போதே இப் பரிதாப சம்பவம் நடைபெற்றது.

இந்த விமானத்தில்- அதிகமானோர் வெளிநாட்டவர்களென்றும் இவர்களில் அவுஸ்திரேலியா, வட கொரியா, சீன நாட்டவர்கள் அடங்கியிருந்தனர் என்றும் தெரியவருகின்றது.

மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள பிலிப்பைன்சின் கரையோரக் காவற் படையினர், மணிலா குடாக்கடலின் 20 மீற்றர் ஆழத்தில் பலியானோரைத் தேடியும், விமானப் பாகங்களை அகற்றவும் சுழியோடித் தேடுதல் வேட்டை நடாத்தி வருகின்றனர்.




இச்சம்பவம்பற்றி தகவல் வெளியிட்ட பிலிப்பைன்சின் உள்ளூர் ஊடகமொன்று, விமானம் புறப்பட்ட 30 நிமிடங்களுக்குள்ளேயே ராடார் திரையிலிருந்து அது காணாமற் போனதாகவும் - பெரும் சத்தத்துடன் விமானம் கடலில் வீழ்ந்ததை சிலர் கண்டதாகவும் கூறியுள்ளது.


லக்ஸம்பேர்க்கில் விபத்துக்குள்ளான விமானம்

இச்சம்பவத்தில் உயிர்பிழைத்த அவுஸ்திரேலியரான ஸ்ரீவ் தொம்சன் - விமானத்தின் வலது புறமிருந்து புகை கிளம்பியதைத் தான் பார்த்தாகவும் அதற்குச் சற்று முன்னர் விமானத்தின் ஒலி பெருக்கி வாயிலாக பைலட் ஆபத்து நேரப் போவதை அறிவித்ததாகவும் கூறினார்.

கடலில் வீழ்ந்ததுமே விமானம் முழுதும் நீரால் நிரம்பியதால் - பயணிகளின் கூக்குரல்களை கூடத் தன்னால் கேட்கமுடியாமற் போனதாக அவர் குறிப்பிட்டார்.

ஃபோக்கர் (Fokker) ரக விமானமொன்று இவ்விதம் விபத்திற்குள்ளாவது, ஒரு வாரத்தினுள் இது இரண்டாவது தடவையென சர்வதேச விமானக் கம்பனிகள் கூறுகின்றன.

லக்ஸம்பேர்க்கில் கடந்த ஆறாந் திகதியன்று - இதேரக விமானமொன்று பனிப்பகுதிக்குள் வீழ்ந்து நொருங்கியதில் 20 பயணிகள் கொல்லப்பட்டிருந்தனர்.

## உலகவலம்

### பாராளுமன்ற விசேட கூட்டம் சதாம் அழைப்பு


ஈராக் நாடாளுமன்றம்

ஐ.நாடுகள் சபை அறிவித்துள்ள ஆயுதச் சோதனை பற்றிய அறிவிப்புப் பற்றிக் கலந்துரையாடுவதற்காக ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் விசேட பாராளுமன்ற கூட்டமொன்றுக்கு அழைத்துள்ளார்.

ஈராக்கிலுள்ள சந்தேகத்துக்கிடமான இடங்களுக்குட்பட்ட ஆயுதங்களைச் சோதனையிடுவது பற்றி, ஐ.நா. பாதுகாப்புச் சபை விடுத்த அறிவிப்பை ஏற்றுக்கொள்வது பற்றி இந்த விசேட பாராளுமன்ற அமர்வில் கலந்துரையாடப்படவுள்ளது.

இதேவேளை - அவசரமாகக் கூட்டப்பட்ட அரபுலீக்கின் அமர்வொன்றில் - ஐ.நா.வின் அறிவிப்பை, ஈராக் ஏற்றுக்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - ஈராக் மீதான எத்தகைய தாக்குதல் முயற்சிகளையும் தாம் நிராகரிப்பதாகவும் - அவ்வாறான முயற்சிகள், முழு அரபு நாடுகளுக்குமே அச்சுறுத்தலாக அமையுமெனவும், கெய்ரோவில் கூடிய இந்த அரபுலீக் அவசர மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - புதிய நிலைபற்றி கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க நிர்வாகம், ஈராக் தவறான வழிமுறைகளை நாடுமாயின், யுத்தம் தவிர்க்கப்படமுடியாதாகிவிடும் என எச்சரித்துள்ளது. இதுபற்றிக் கருத்து தெரிவித்த அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபையின் ஆலோசகர் கொண்டாலிசா ரைஸ் - இனி உலகின் நேரத்தை வீணாக்கப்போவதில்லை என்றும், இன்னுமொரு பூனை - எலி விளையாட்டு வேண்டாமென்றும் விமர்சனம் வெளியிட்டுள்ளார்.

# இஸ்ரேலிய குடிமனைப் பகுதிக்குள் ஆயுததாரிகள் துப்பாக்கித் தாக்குதல்!

## இரு சிறுவர்களுட்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே பலி

(ரெல் அவிவ்)

இஸ்ரேலியர்கள் தங்கியிருந்த குடிமனைப் பகுதியொன்றினுள் நுழைந்த துப்பாக்கிதாரியினால்- இரண்டு சிறு


தற்கொலையாளிகளின் சிதைவடைந்த கார்

வர்கள் உட்பட 5 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டனர்.

மேற்குக் கரைக்குச் சமீபமாக, வடக்கு இஸ்ரேலில் இந்தக் குடிமனை அமைந்திருந்தது.

இத்தாக்குதலை நடாத்திய துப்பாக்கிதாரி தப்பிச் சென்று விட்டதாக இஸ்ரேலியப் பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக கருத்துக் கூறிய - இஸ்ரேலியப் பிரதமர் அலுவலக உயரதிகாரி ஒருவர் - பாலஸ்தீனத் தீவிரவாதிகளால் இஸ்ரேலியப் பொதுமக்கள் தமது வீடுகளில் வைத்தே தாக்கப்படுவது அதிகரித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

காஸா நகர்ப் பகுதியில் இஸ்ரேலிய விமானப் படையின் ஹெலிகொப்டர்கள், கார்களைத் திருத்தும் கராஜ் ஒன்றின் மீது பத்து ரொக்கட்டுக்களை வீசித் தாக்குதல்களை நடாத்தியிருந்த தற்குப் பின்னர் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதேவேளை- தாக்குதல் நடாத்தப்பட்ட இஸ்ரேலிய குடிமனைப் பகுதி, பாரிய தேடுதல் வெளிச்சங்கள் பொருத்தப்பட்ட நிலையில் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க -

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வெகு அருகாமையில், நேற்று முன்தினம் சந்தேகத்திற்கிடமான காரொன்றை இஸ்ரேல் பொலிசார் மறித்துச் சோதனையிட முயன்ற போது- அக்காரிலிருந்தோர் தாம் பொருத்தியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கவைத்து தம்மையும் காரையும் அழித்துக் கொண்டதாகவும் பொலிசார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இஸ்ரேலில் பதற்றமான சம்பவங்கள் நடைபெறும் நிலை இவ்வாறிருக்க-

மேற்குக் கரை நகரான ஜெனின்


பலியான இயாட்

பகுதியில் - இஸ்லாமிய ஜிகாத் அமைப்பின் உயர் தளபதி இயாட் சவோல்ஹாவைக் கொன்ற இஸ்ரேலியப் படையினர் அங்கிருந்து தற்போது வாபஸாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# உயிரியல் ஆயுதங்களை ஒழிக்க மீண்டும் ஜெனீவாவில் முயற்சிகள்!

(ஜெனீவா)

உயிரில் நச்சுக்கிருமிகளைப் பரப்பும் யுத்தமுறைக்கு எதிராக - உலகு தழுவிய நடவடிக்கைகள் மீண்டும் நேற்று முதல் ஜெனீவாவிலிருந்து ஆரம்பிக்கப்பட்டன.

கடந்த வருடம் இத்தகைய நடவடிக்கைகளிலிருந்து அமெரிக்கா பின்வாங்கியதால் இவை ஸ்தம்பிதமடைந்திருந்தன.

1972 ம் ஆண்டின் உயிரியல் ஆயுதங்கள் சம்பந்தமான ஒப்பந்தத்தின் பிரகாரம் - அதில் கையெழுத்திட்ட உறுப்பு நாடுகள், சகல உயிரியல் ஆயுதங்களையும் தடைசெய்யும் செயற்பாடுகளுக்கு உறுதியான ஆதரவை வழங்குவதாக முடிவு செய்திருந்தன.


உயிரியல் எதிர்ப்புக் கவச உடையில் படையினர்

எனினும், அமெரிக்கா கடந்த ஆண்டில் இச்செயற்பாடுகளிலிருந்து விலகிக் கொண்டதையடுத்து மந்தகதியடைந்திருந்த நிலை, தொடரும் உயிரியல் ஆயுத அச்சுறுத்தல்களால் மீண்டும் சூடு பிடித்துள்ளது.

ஈரான், ஈராக், வடகொரியா, லிபியா உட்பட உலகின் சிலநாடுகள் இன்னமும் உயிரியல் ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டிருப்பதால் தான் இதில் பங்குபற்ற முடியாமலுள்ளதாக அறிவித்திருக்கும் அமெரிக்கா-

2006 ஆம் ஆண்டு வரை இத் தடை பற்றிய செயற்பாடுகளை பிற்போடுமாறும் கேட்டுள்ளது.

வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டில்

HAPPY BIRTHDAY



பெயர் : பாஸ்கரன் மயூராதா
முகவரி : பரமேஸ்வரி அம்பாள் வீதி, கோப்பாய் தெற்கு.



பெயர் : புவீந்திரகுமார் ஆருசியா
முகவரி : சங்கரத்தை, வட்டுக்கோட்டை (கனடா)

அகவை ஏழில்



பெயர் : சிவராஜா கஜேந்திரன்
முகவரி : கற்கோவளம், பருத்தித்துறை.

அகவை ஒன்பதில்



பெயர் : த.ஆதவன்
முகவரி : மிருசுவில் வடக்கு, மிருசுவில்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மீள் குடியமர்வு விசேட மாநாடு அடுத்தவாரம் யாழ்.செயலகத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மக்களின் மீள்குடியமர்வு தொடர்பான விசேட மாநாடு ஒன்று எதிர்வரும் இருபத்தியொராம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும், மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கைகளின் போது எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. (க)

# சடலம் இன்று ஒப்படைப்பு

அனலைதீவில் மர்மமான முறையில் கடந்த சனிக்கிழமை இறந்த ஈ.பி.டி.பி உறுப்பினரின் பிரேத பரிசோதனை நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

பிரரேத பரிசோதனையின் பின் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. இன்று தான் சடலம் ஒப்படைக்கப்படவுள்ளது.

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD

- கணினியில் முன்னனுபவம் இல்லாதவர்களிற்கு தனிப்பட்ட முறையில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், games, மற்றும் விசேட வகுப்புக்கள்.

கணினி உலகில் முன்னணியில் திகழ இன்றே நாடுங்கள்!!

CES

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223,Kasthuriyar Road,
Jaffna.
(Opposide of J/Hindu Primary School)

விண்ணப்ப முடிவுத் திகதி:
15.12.2002

# 185 புலிகள் வன்னியிலிருந்து நேற்று மட்டக்களப்பு சென்றனர்

## படையினர் பாதுகாப்பு வழங்கினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இருந்து வன்னிக்கு வந்த 185 விடுதலைப் புலி உறுப்பினர்கள் நேற்றுக்காலை 7 மணிக்கு வன்னியில் இருந்து மட்டக்களப்புக்கு ஆறு பஸ்களில் புறப்பட்டுச் சென்றனர்.

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தளபதி ராபர்ட் தலைமையில் 70 ஆண் போராளிகளும், மகளிர் படையணித் தளபதி நிலாவினி தலைமையில் 115 பெண் போராளிகளும் மட்டக்களப்புக்கு புறப்பட்டனர்.

இவர்கள் ஓமந்தையில் இருந்து மட்டக்களப்பு செங்கலடி கறுத்தப் பாலம் வரை இராணுவ வழித்துணையுடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

# பூநகரி 'தவளைத் தாக்குதல்' நினைவுக்கல் திறந்துவைப்பு

(வவுனியா)

பூநகரி கூட்டுப்படைத்தளம் மீதான 'தவளை தாக்குதல்' நடவடிக்கையின் ஒன்பதாம் ஆண்டு நிறைவு வெற்றி விழா நேற்று பூநகரி வாடியடிச்சந்தியில் நடைபெற்றது.

வாடியடிச்சந்தியில் மேற்படி தாக்குதல் நினைவாக நேற்று நினைவுக்கல் திறந்து வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நினைவுக் கூட்டம் நடைபெற்றது.

# முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு மூவர் கொண்ட அதிகாரக் குழு

## பிரதமர் பணிப்பின் பேரில் நியமனம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதிகளில் வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்பு மற்றும் நலனை கவனிக்கவென பிரதமர் ரணிலின் பணிப்பின் பேரில் உயர் அதிகாரக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சின் செயலர் எம்.எம்.ஜுனைட் தலைமையிலான இக்குழுவில் பொலிஸ்மா அதிபர் ரி. ஆனந்தராஜா, பிரதி பொலிஸ்மா அதிபர் நிமால் குணதிலக ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

சட்ட அமுலாக்கம், சமூகநிலைமைகளை மேம்படுத்துதல் போன்ற அலுவல்களை இக்குழு கையாளும்.

# இந்திய மீன்பிடிப்படகு தாக்கப்பட்டு கொள்ளை

(மன்னார்)

மன்னார் பேசாலைக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய இழுவைப்படகுகள் மூன்றை அந்தப் பகுதி மீனவர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இழுவைப்படகில் இருந்த 200 கிலோ இறாலும் கொள்ளையிடப்பட்டது.

மூன்று சிறிய படகுகளில் வந்த 17 பேர் இந்திய மீனவர்களைத் தாக்கி இந்த இறால்களைக் கொளளையடித்துச் சென்றுள்ளனர்.

பின்னர் இவற்றை மன்னார் பேசாலைப் பகுதியில் அவர்கள் விற்பனை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடித்துவருவது குறிப்பிடத்தக்கது

# அரசாங்க ஊழியர்கள் சுய விருப்பில் ஓய்வுபெற விரைவில் புதிய திட்டம் !

(கொழும்பு)

அரசாங்க சேவையில் பெரும் ஆட்குறைப்பைச் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஒரு தொகுதி அரசாங்க ஊழியர்களுக்கு நஷ்டஈட்டினை வழங்கி விருப்பத்தின் அடிப்படையில் அவர்களை சேவையில் இருந்து நீக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதனடிப்படையில் - எட்டு லட்சம் ரூபா வரையான நஷ்டஈட்டை பெற்றுக்கொண்டு, அரச ஊழியர் ஒருவர் சேவையிலிருந்து விலகலாம்.

இல்லையேல், வயதெல்லை கருத்திலெடுக்கப்படாத வகையில், அரச ஊழியர்கள் விலகும்போது மூன்று இலட்சம் ரூபா வழங்கப்படுவதுடன், தற்போதய சம்பளப்படி ஓய்வூதியமும் கிடைக்கும்.

இந்த இரண்டு திட்டங்களில் அரச ஊழியர்கள் ஏதாவதொன்றைப் பின்பற்றலாம். இது பற்றிய சுற்று நிருபம் மிக விரைவில் அரசாங்கத்தால் வெளியிடப்படவுள்ளது.

# கருத்து வேறுபாடுகளை மறந்து செயற்படுவேன் என்கிறார் சந்திரிகா

வருங்காலச் சந்ததியின் வளமான எதிர்காலத்தை கருத்திற் கொண்டு எம்மிடையே உள்ள குரோதங்களையும், அரசியல் கட்சி இன, மத வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு செயல்படுவோம். நாட்டின் தலைவர் என்ற ரீதியில் நாட்டைக் கட்டி எழுப்பும் பணிக்கு பாடுபடுவேன் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

பேருவளைத் தொகுதியில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், நாடு 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்களை இழந்து விட்டது. அதே அளவிலான ஒரு தொகையான இளைஞர்களை தமிழ்ச் சமூகத்தினரும் இழந்துள்ளனர். இது வேதனைக்குரிய விடயமாகும்.

2500 வருடகாலச் சரித்திரத்தில் பௌத்த நாடு ஒன்றில் இப்படியான அழிவு இடம் பெற்றது கவலைக்குரியது. மதங்கள் எமக்கு நல்ல வழியைக் காட்டுகின்றன. புத்தமதம் மட்டுமல்ல இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்கள் கூட இந்த நல்ல வழியைக் காட்டியுள்ளன என்றும் கூறினார்.

### ஈ.பி.டி.பி.....

முன் சமர்ப்பிக்கப்பட்டு அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

கொலைச் சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து மீட்கப்பட்ட 9 எம்.எம். கைத்துப்பாக்கி ரவைகள், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினால் மீள ஒப்படைக்கப்பட்ட 9 எம்.எம் கைத்துப்பாக்கிகளிலிருந்து வெளி வந்தவையா என்பது குறித்து பகுப்பாய்வு செய்யப்படவுள்ளது. இதற்கான பணிப்புரையை கொழும்பு கோட்டை நீதவானிடம் பெற்றுக் கொள்ளப்பட இருக்கின்றது.

மேலும் இவ்வழக்கின் விசாரணையை விரைவில் நடாத்தி முடிப்பதற்கு இந்நீதிமன்றம் மிகவும் அக்கறையாக இருக்கின்றது என்றும் கொழும்பு புலனாய்வுப் பிரிவு பி.எச்.டீ ரஞ்சித் சில்வாவின் அறிக்கையை நான் ஆராயும் போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்களும் புலனாய்வுத் துறையினரால் தேடப்பட்டு வருபவர்களுமான ரில்வன், சலீம் ஆகிய இருவரையும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டியுள்ளது என்றும் எனவே சந்தேகநபர்களோ அல்லது அவர்கள் சார்ந்த இயக்கமோ இவ்விடயத்தில் ஒத்துழைப்பு வழங்கினால் வழக்கு விசாரணையை விரைவுபடுத்தலாம் எனவும் யாழ்.நீதவான் மேலும் தெரிவித்தார். (க,லி)

யாழ்.மாவட்ட
சனசமூக நிலையங்களுக்கு
நமது ஈழநாட்டின்
இலவசப் பிரதிகள்!

யாழ்.மாவட்டத்திலுள்ள 50 சனசமூக நிலையங்களுக்கு
'நமது ஈழநாடு'
ஒரு மாதகாலத்திற்கு இலவசப்பிரதிகளை அனுப்பவுள்ளது.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்

கீழுள்ள கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எதிர்வரும் 15.11.2002 ற்கு முன்னதாக
'நமது ஈழநாடு'
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

- குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 50 சனசமூக நிலையங்களின் விபரம் 17ஆம் திகதிய நமது ஈழநாட்டில் வெளியாகும்.
- தேர்ந்தெடுக்கப்படும் சனசமூக நிலையங்களுக்கு வரும் 20.11.2002 இலிருந்து 20.12.2002 வரை இலவசப் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

நமது ஈழநாடு இலவசப் பிரதித் திட்டம்

சனசமூக நிலையத்தின் பெயர் : ......................................
பதிவு இலக்கம் : ......................................
முகவரி : ......................................
நூல் நிலைய வசதி : உண்டு / இல்லை
இலவசப்பிரதியை பெறக்கூடிய அருகிலுள்ள 'நமது ஈழநாடு' பத்திரிகை முகவர் : ......................................

............................ ............................
தலைவர்/ செயலாளர் ஒப்பம் திகதி

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்நகர்.
A/L 2004
LOGIC
குறியீட்டு அளவையியல்
BY: கமல்
ஆரம்பம்:13/11/ 2002 WED 4.00
(WED, FRI 4.00 )
(028)

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.20 | 96.54 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 152.70 | 154.12 |
| 1 யூரோ | 97.00 | 98.19 |
| 1 சுவிஸ் பிராங் | 66.20 | 66.37 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 53.82 | 53.91 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.71 | 25.71 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.11.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.